தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை

தமிழ் இணையக் கல்விக்கழகம்

திருச்சிற்றம்பலம்



# மரபுவழி பண்ணிசைப் பயிற்சி

MPA0 மேல்நிலை

# அறிமுகம்

அடிப்படைநிலையில் முதல் மூவர் பாடிய முதல் திருப்பதிகங்கள், இறைவன் அருள் புரிந்த சிறப்பினைப் கூறும் சிறப்பு பதிகங்கள், நாயன்மார்கள் அருட்செயல்களைக் கூறும் அற்புத பதிகங்கள், இறையடியார்கள் நலனுக்காகப் பாடப்பட்ட பொதுப் பதிகங்கள், கோயில்களில் பாடப்பெறும் பஞ்சபுராண பதிகங்களில் உள்ள சிறப்புமிக்க சில பாடல்களைப் பாடக் கற்றுக் கொள்வீர்கள்.

இம்மேல்நிலையில் பன்னிரு திருமுறைகளில் இடம்பெற்ற நூல்கள், அவற்றைப் பாடிய நாயன்மார்கள் பற்றிய சில குறிப்புகள், சமயக்குரவர் நால்வர் பற்றிய சிறப்புகள், இப்பதிகங்கள் பாடப்பெற்ற பண்கள், உயிர்கள் இறைவன் அருளைப் பெற ஓத வேண்டிய சிறப்பு பதிகங்கள் மற்றும் அற்புத பதிகங்கள், கோயிலில் பாடப்பெறும் பன்னிரு திருமுறை பாரயணத் திருப்பதிகங்கள், நால்வர் முக்தி பெறும் முன்னர் பாடிய பதிகங்கள் முதலானவை பற்றி கற்றுக் கொள்ளலாம்.

திருமுறையில் திருஞானசம்பந்தர் தாம் பாடியருளிய மூன்று திருமுறைகளையும் பண் அமைப்பிலேயே இசைத்தமிழாகவே பாடியுள்ளார். திருநாவுக்கரசர் இயற்றமிழிலும், இசைத்தமிழிலும் பாடல்களை அருளியுள்ளார். நான்காம் திருமுறைப் பாடல்கள் பண் அமைப்புடையவை. ஐந்தாம் திருமுறை 'குறுந்தொகை' என்னும் யாப்பு அமைப்பிலும், ஆறாம் திருமுறை 'தாண்டகம்' என்னும் யாப்பு அமைப்பிலும் அமைந்துள்ளன. எனவே அப்பர் அருளிய நான்காம் திருமுறை 'இசைத்தமிழ்' எனவும் ஐந்து, ஆறாம் திருமுறைகள் 'இயற்றமிழ்' என்று அறியப்படுகிறது. சுந்தரருக்கு இறைவன் " நீ நமக்கு செய்யவேண்டிய (அர்ச்சனை) வழிபாடு பாட்டேயாகும். ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுவாயாக" என்று அருளினார். பண்ணோடு இயைந்த தெய்வீகத் தமிழே தேவாரமாகும். இத்தகைய தேவாரப் பாடல்களைப் பண்ணோடு பயிற்றுவிக்கும் நோக்கில் தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் மரபுவழிப் பண்ணிசைப் பயிற்சிக்கான மேல்நிலைப் பாடம் பயிற்றுவிக்கப்படவுள்ளது.

மேலும், இந்நிலையில் தேவாரம் மற்றும் திருவாசகமும் கற்றுத் தரப்படுவதால், தமிழ் மொழியின் சிறப்பை உணர்ந்து நால்வர் பாடிய திருமுறைப்பாடல்களை அதன் பண்களோடு பாட கற்றுக்கொள்ள இயலும்.

இசை என்பது நம் மனதை ஒருமுகப்படுத்துவது. அந்தப் பழந்தமிழ் இசையின் நுணுக்கங்களை இந்த மேல்நிலை வகுப்பு கற்றுத்தரும். ஒரு பாடலைப் பொருள் உணர்ந்து பாடுதலே அதன் பயனை நாம் துய்க்க வழிவகைச் செய்யும். இதனையே

"சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து
சொல்லுவர் செல்வர் சிவப்புரத்தின்
உள்ளார் சிவனடிக்கீழ்"

என்றார் மாணிக்கவாசகர். இறைவனைப் போற்றிப் பொருள் உணர்ந்து பாட இந்த தேவார வகுப்பு வழிவகை செய்யும் என்பது திண்ணம்.

இப்பாடல்களைக் கற்றுக்கொள்வதன் மூலம் இறைவன் மீது பக்தி செலுத்தும் நெறியையும். உயிர்களிடத்தில் அன்பு செலுத்தும் முறையையும், இறைவனை என்றும் நினைந்து துதி செய்யும் பாராயணப் பாடல்களையும் அறிந்து. இறைவனின் அருளைப் பெறலாம்.

## பன்னிரு திருமுறை

நிலையான செல்வத்தை அடியார்கள் அடைதற்கு வழிகாட்டும் நூல் திருமுறை. சைவ சமயத்தைப் போற்றி வளர்த்த நாயன்மார்கள் பாடிய பதிகங்களும், அவரது வரலாற்றுக் குறிப்புகளும் சேர்த்து தொகுக்கப்பட்டவை பன்னிரு திருமுறையாகும். இப்பன்னிரு திருமுறையானது இருபத்தி ஏழு ஆசிரியர்களால் அருளப்பட்டுள்ளது. இதைச் சிறப்பிக்கும் வகையில் தனிப்பாடல் ஒன்றும் உள்ளது.

திருஞானசம்பந்தர் வாகீசர் சுந்தரர் திருவாத வூரர் மற்றைத்
திருமாளிகைத் தேவர் சேந்தனார் கருவூரர் தெள்ளு பூந்துருத்தி நம்பி
வருஞான கண்டரா தித்தர் வேணாட்டடிகள் வாய்ந்த திரு வாலியமுதர்
மருவு புருடோத்தமர் சேதிராயர் மூலர் மன்னு திரு ஆல வாயார்
ஒருகாரைக் காலம்மை ஐயடிகள் சேரமான் ஒளிர் கீரர் கல்லாடனார்
ஒண் கபிலர் பரணர் மெய்உண ரிளம் பெருமானோடு ஓங்கும் அதிராவடிகளார்
திருமேவு பட்டினத்தடிகளொடு நம்பியாண்டார்நம்பி சேக்கிழாரும்
சிவநெறித் திருமுறைகள் பன்னிரண்டருளிச் செய்த தெய்விகத் தன்மையோரே.

– புலவர். திரு. வை. தருமலிங்கம் பிள்ளை

| எண் | திருமுறை அருளியவர் | திருமுறை | பதிகம் பெயர் |
|---|---|---|---|
| 1 | திருஞானசம்பந்தர் | 1,2,3 திருமுறைகள் | தேவாரம் (திருக்கடைக்காப்பு) |
| 2 | திருநாவுக்கரசர் | 4,5,6 திருமுறைகள் | தேவாரம் |
| 3 | சுந்தரர் | ஏழாம் திருமுறை | தேவாரம் (திருப்பாட்டு) |
| 4 | மாணிக்கவாசகர் | எட்டாம் திருமுறை | திருவாசகம், திருக்கோவையார் |
| 5 | திருமாளிகைத்தேவர் | ஒன்பதாம் திருமுறை | திருவிசைப்பா |
| 6 | சேந்தனார் | ஒன்பதாம் திருமுறை | திருவிசைப்பா திருப்பல்லாண்டு |

| எண் | திருமுறை அருளியவர் | திருமுறை | பதிகம் பெயர் |
|---|---|---|---|
| 7 | கருவூர்த்தேவர் | ஒன்பதாம் திருமுறை | திருவிசைப்பா |
| 8 | பூந்துருத்தி நம்பிகாடநம்பி | ஒன்பதாம் திருமுறை | திருவிசைப்பா |
| 9 | கண்டராதித்தர் | ஒன்பதாம் திருமுறை | திருவிசைப்பா |
| 10 | வேணாட்டடிகள் | ஒன்பதாம் திருமுறை | திருவிசைப்பா |
| 11 | திருவாலியமுதனார் | ஒன்பதாம் திருமுறை | திருவிசைப்பா |
| 12 | புருடோத்தம நம்பி | ஒன்பதாம் திருமுறை | திருவிசைப்பா |
| 13 | சேதிராயர் | ஒன்பதாம் திருமுறை | திருவிசைப்பா |
| 14 | திருமூலர் | பத்தாம் திருமுறை | திருமந்திரம் |
| 15 | திருஆலவாய் உடையார் | பதினோராம் திருமுறை | திருமுகப்பாசுரம் |
| 16 | காரைக்கால் அம்மையார் | பதினோராம் திருமுறை | 3 பிரபந்தங்கள் |
| 17 | ஐயடிகள் காடவர்கோன் நாயனார் | பதினோராம் திருமுறை | 1 பிரபந்தம் |
| 18 | சேரமான் பெருமான் நாயனார் | பதினோராம் திருமுறை | 3 பிரபந்தங்கள் |
| 19 | நக்கீரதேவ நாயனார் | பதினோராம் திருமுறை | 8 பிரபந்தங்கள் |
| 20 | கல்லாடதேவ நாயனார் | பதினோராம் திருமுறை | 1 பிரபந்தம் |
| 21 | கபிலதேவ நாயனார் | பதினோராம் திருமுறை | 3 பிரபந்தங்கள் |
| 22 | பரணதேவ நாயனார் | பதினோராம் திருமுறை | 1 பிரபந்தம் |
| 23 | இளம்பெருமான் அடிகள் | பதினோராம் திருமுறை | 1 பிரபந்தம் |
| 24 | அதிரா அடிகள் | பதினோராம் திருமுறை | 1 பிரபந்தம் |
| 25 | பட்டினத்தார் | பதினோராம் திருமுறை | 5 பிரபந்தங்கள் |
| 26 | நம்பியாண்டார் நம்பி | பதினோராம் திருமுறை | 10 பிரபந்தங்கள் |
| 27 | சேக்கிழார் பெருமான் | பன்னிரண்டாம் திருமுறை | திருத்தொண்டர் புராணம் (பெரிய புராணம்) |

## பண்

பண் என்ற சொல் பொதுவாக ஓசை என்று பொருள்படும். இசையோடு கூடிய பாடல் என்றும் பொருள்படும். இனிய இசைக்கோர்வைகள் பழந்தமிழிசையில் பண்கள் என அழைக்கப்பட்டன.

இப்பண்கள் தற்போது இராகங்கள் என அழைக்கப்படுகின்றன. பழந்தமிழ்ப் பாடல்கள் எண்ணற்ற இருப்பினும் தற்போது வரை பழைய முறையிலேயே பாடுவது தேவாரப் பதிகங்கள் மட்டுமே ஆகும்.

முதலில் கிடைக்கும் பண்ணிசை வடிவம் 6ம் நூற்றாண்டைச் சேர்ந்த காரைக்கால் அம்மையாரின் மூத்த திருப்பதிகங்கள் ஆகும். பண்களை அடிப்படையாக கொண்ட இசை என்பதால் 'பண்ணிசை' என்று அழைக்கப்படுகிறது.

பல்லவர் காலப்பகுதியில் கோயில்கள் தோறும் சென்று இனிமைமிகு பண்களில் தேவாரப்பதிகங்களைப் பாடிய நாயன்மார்கள் இசையோடு பக்தி நெறி புகட்டினார்கள். சங்ககால தமிழிசை மரபினை மீட்டெடுத்தனர்.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய மூவரும் தமது தேவாரப்பாடல்களில் பண்பற்றிய குறிப்புகளை ஏராளமாக தந்துள்ளனர். உதாரணமாக

'பண்ணோடு இசை பாடிய பத்தும்" என்று சம்பந்தப்பெருமானும்,

"பண்ணுடை பாடலோடும் பரமா நீ ஆடுமாறே"என்று அப்பர் பெருமானும்,

"பண்ணார் இசைகளது கொண்டு பலரும் ஏத்தும் பழையனூர்"

என்று சுந்தரர் பெருமானும் தமது பாடல்களில் பண்ணிசையின் சிறப்பினை உணர்த்தியுள்ளனர்.

தேவாரப் பாடல்கள் 24 பண்களால் பாடப்பட்டுள்ளன. அப்பண்கள், தற்போதைய இராகங்கள் மற்றும் அதற்கான சான்றுப் பாடல்களைக் கீழே காணலாம்.

### தேவாரப் பண்கள் 23 + 1

| எண் | பண் | இராகம் | சான்று (பாடல்கள்) |
|---|---|---|---|
| 1 | நட்டபாடை | நாட்டை | தோடுடைய செவியன் 1.001 |
| 2 | கொல்லி | நவரோசு | மண்ணில் நல்ல வண்ணம் 3.024 |
| 3 | இந்தளம் | மாயாமாளவகௌளை | பித்தா பிறைசூடி 7.001 |
| 4 | குறிஞ்சி | அரிகாம்போதி | ஏற்றான் மறக்கேன் 7.092 |

| எண் | பண் | இராகம் | சான்று (பாடல்கள்) |
|---|---|---|---|
| 5 | செந்துருத்தி | மத்யமாவதி | மீளா அடிமை 7.095 |
| 6 | சீகாமரம் | நாதநாமக்கிரியா | மட்டிட்ட புன்னையும் 2.047 |
| 7 | நட்டராகம் | பந்துவராளி | பொன்னார் மேனியனே 7.024 |
| 8 | தக்கராகம் | காம்போதி | மடையில் வாளை பாய மாதரார் 1.023 |
| 9 | பழந்தக்கராகம் | சுத்தசாவேரி | சொன்மாலை பயில்கின்ற 4.012 |
| 10 | பழம்பஞ்சுரம் | சங்கராபரணம் | பற்றற்றார் சேர் 4.15 (பாவநாசத் திருப்பதிகம்) |
| 11 | தக்கேசி | காம்போதி | பொன்னும் மெய்ப்பொருளும் 7.059 |
| 12 | செவ்வழி | யதுகுல காம்போதி | பொடிகள் பூசிப் பல 2.118 |
| 13 | பியந்தைக் காந்தாரம் | நவரோசு | வேயுறு தோளிபங்கன் 2.085 |
| 14 | காந்தாரம் | நவரோசு | மந்திரமாவது நீறு 2.066 |
| 15 | காந்தார பஞ்சமம் | கேதாரகௌளை | இடரினும் தளரினும் 3.004 |
| 16 | கொல்லிக்கௌவாணம் | நவரோசு | தில்லைவாழ் அந்தணர்தம் 7.039 |
| 17 | கௌசிகம் | பைரவி | காதலாகிக் கசிந்து 3.049 |
| 18 | பஞ்சமம் | ஆகிரி | தானெனை முன் படைத்தான் 7.100 |
| 19 | சாதாரி | பந்துவராளி | தலையே நீ வணங்காய் 4.009 |
| 20 | புறநீர்மை | பூபாளம் | புள்ளித்தோலாடை 3.119 |
| 21 | அந்தாளக்குறிஞ்சி | சாமா | கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம் 3.125 (திருநல்லூர்ப்பெருமணம்) |
| 22 | மேகராகக் குறிஞ்சி | நீலாம்பரி | நீறுசேர்வதொர் மேனியர் 1.135 (திருப்பராய்த்துறை) |
| 23 | வியாழக் குறிஞ்சி | சௌராஷ்டிரம் | அவ்வினைக்கு இவ்வினை 1.116 (திருநீலகண்டத் திருப்பதிகம்) |
| 24 | யாழ்மூரி | அடானா | மாதர் மடப்பிடி 1.136(திருத்தருமபுரம்) |

<u>பொருளடக்கம்</u>


| வகுப்பு எண் | பாடல் தலைப்பு | பாடல்கள் | அருளியவர் | பதிக எண் |
|---|---|---|---|---|
| 1 | குருவணக்கம் | தெளிவு குருவின் | திருமூலர் | 10–01–27 |
| | சமயக்குரவர் துதி | சைவத்தின்மேல்சமயம் | சைவ எல்லைப்ப நாவலர் | |
| 2 | சிறப்புப் பதிகங்கள் –1 | மறையுடையாய் தோலுடையாய் | திருஞானசம்பந்தர் | 1–52 |
| 3 | | கருநட்டக் கண்டனை (குனித்த புருவமும்) | திருநாவுக்கரசர் | 4.81 |
| 4 | | தம்மையே புகழ்ந்து | சுந்தரர் | 7.34 |
| 5 | அற்புதப் பதிகங்கள்–1 | பூத்தேர்ந்தாயன | திருஞானசம்பந்தர் | 1.54 |
| 6 | | மாதர் பிறைக் கண்ணியானை | திருநாவுக்கரசர் | 4.03 |
| 7 | | நீள நினைந்தடியேன் | சுந்தரர் | 7.2 |
| 8 | சிறப்புப் பதிகங்கள் – 2 | இடரினும் தளரினும் | திருஞானசம்பந்தர் | 3.004 |
| 9 | | ஓசை ஒலி எலாம் | திருநாவுக்கரசர் | 6.38 |
| 10 | | தில்லைவாழ் அந்தணர் | சுந்தரர் | 7.39 |
| 11 | அற்புதப் பதிகங்கள்– 2 | மந்திரமாவது நீறு | திருஞானசம்பந்தர் | 2.66 |
| 12 | | பண்ணினேர் மொழியாள் | திருநாவுக்கரசர் | 5.01 |
| 13 | | ஆலந்தான் உகந்து | சுந்தரர் | 7.61 |
| 14 | சிறப்புப் பதிகங்கள் –3 | அவ்வினைக்கு இவ்வினை | திருஞானசம்பந்தர் | 1.116 |
| 15 | | ஈன்றாளுமாய் எனக்கு | திருநாவுக்கரசர் | 4.94 |
| 16 | | மற்றுப்பற்று எனக்கு | சுந்தரர் | 7.48 |
| 17 | மீள் பயிற்சி | | | |
| 18 | திருவாசகம் | பிடித்த பத்து – அம்மையே அப்பா | மாணிக்கவாசகர் | 8.37 |
| 19 | | குழைத்த பத்து – வேண்டத்தக்கது அறிவோய் | மாணிக்கவாசகர் | 8.33 |
| 20 | | திருப்பள்ளி எழுச்சி – போற்றி என் வாழ் முதல் | மாணிக்கவாசகர் | 8.2 |
| 21 | | திருப்பொன்னூசல் – சீரார் பவளங்கால் | மாணிக்கவாசகர் | 8.16 |
| 22 | | அருள் பத்து – ஜோதியே சுடரே | மாணிக்கவாசகர் | 8.29 |
| 23 | | திரு எம்பாவை – ஆதியும் அந்தமும் | மாணிக்கவாசகர் | 8.07 |
| 24 | நால்வர் முத்திப் | காதலாகிக் கசிந்து | திருஞானசம்பந்தர் | 3.49 |

| வகுப்பு எண் | பாடல் தலைப்பு | பாடல்கள் | அருளியவர் | பதிக எண் |
|---|---|---|---|---|
| 25 | பதிகங்கள் | எண்ணுகேன் என் சொல்லி | திருநாவுக்கரசர் | 6.99 |
| 26 | | தான் எனை முன் படைத்தான் | சுந்தரர் | 7.1 |
| 27 | | அச்சோப் பதிகம் – முத்திநெறி அறியாத | மாணிக்கவாசகர் | 8.51 |
| 28 | மீள் பயிற்சி | | | |
| 29 | பன்னிரு திருமுறை பாராயணம் 14 பாடல்கள் | முதல் 4 பாடல்கள் | | |
| 30 | | அடுத்த 4 பாடல்கள் | | |
| 31 | | அடுத்த 4 பாடல்கள் | | |
| 32 | | அடுத்த 2 பாடல்கள் | | |
| 33 | மீள் பயிற்சி | | | |

# முன்னுரை

இம்மேல்நிலைப் பயிற்சி வகுப்பில் குருவணக்கம், சமயக்குரவர் துதியோடு மூவர் பாடிய தேவாரத்தில் சிறப்பு மிக்க பதிகங்கள், திருவாசகத்தில் பிடித்த பத்து, குழைத்த பத்து, திருப்பள்ளி எழுச்சி, திருப்பொன்னூசல், அருள் பத்து, திருவெம்பாவை ஆகியவற்றிலிருந்து பதிகங்களும், சமயக்குரவர் நால்வர் முக்தி பதிகங்களும், திருத்தலங்களில் பாடப்படும் பன்னிரு திருமுறை பாராயணத்திலிருந்து 14 பாடல்களும் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சியின் வழியாக ஆலயங்களின் சிறப்புகள், நாயன்மார்களின் பக்தி பாங்கு, மன்னர்களின் ஆட்சித்திறம், தமிழர்களின் வாழ்வியல் முறை ஆகியவற்றை அறிந்து கொள்ள இயலும்.

# பதிகப் பாடல்கள்

வகுப்பு–1

## குரு வணக்கம்

### திருமூலர் அருளிய திருமந்திரம்

**முதல் தந்திரம்** : 4. **உபதேசம் பாடல்** : 27

**தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே**

**பாடல் விளக்கம்**

திருவருளால் திருவடித் தெளிவினை அருளும் சிவகுருவின் திருமேனி காண்டல் தெளிவினில் சீலமாகும். அவர்தம் திருப் பெயரினைத் திறம்பட நாளும் சொல்லுதல் தெளிவினில் நோன்பாகும். அச்சிவகுரு செவி அறிவுறுத்தருளிய திருவைந்தெழுத்தைச் சிறப்புற உளங்கொளக் கேட்டல் தெளிவினில் செறிவாகும். அச் சிவகுருவின் உண்மை நிறைவாகிய திருவுருவினை உடன் கலந்து நாடல் தெளிவினில் அறிவாகும். (தெளிவு–ஞானம்.. காண்டல் செப்பல் என்னும் இரண்டும் புறமாகவும், கேட்டல் சிந்தித்தல் இரண்டும் அகமாகவும் கொள்க.)

## சமயக்குரவர் துதி

**அருளியவர்** : சைவ எல்லப்பநாவலர்

**நூல்** : திருஅருணைக்கலம்பகம்

**சைவத்தின் மேல் சமயம் வேறில்லை அதிற்சார் சிவமாம்**
**தெய்வத்தின் மேல் தெய்வம் இல்எனும் நான்மறைச் செம்பொருள்**
**வாய்மை வைத்த சீர்திருத் தேவாரமும் திருவாசகமும்**
**உய்வைத் தரச் செய்த நால்வர் பொற்றாள் எம் உயிர்துணையே**

**பாடல் விளக்கம்**

தேவார, திருவாசகம் என்பவற்றை இயற்றிய சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற நால்வரின் நூல்களும் சைவத்தைவிட மேலான சமயம் வேறு இல்லை என்பதையும் சிவத்தை விட மேலான தெய்வம் வேறு இல்லை என்பதையும் கூறுகின்றன; அந்நால்வர் திருவடிகள் எனது உயிர்க்குத் துணையானவை.

## சிறப்புப் பதிகங்கள் – 1

வகுப்பு–2

### திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**திருமுறை** : முதல் திருமுறை பதிகம் : 52

**பண்** : பழந்தக்கராகம் இராகம் : ஆரபி, சுத்த சாவேரி

**தலம்** : திருநெடுங்களம்

**இறைவன்** : திருநெடுங்களநாதர் இறைவி : மங்களாம்பிகை

**பயன்** : இடர்கள் நீங்கி இன்பம் பெற ஓத வேண்டிய பதிகம்

**சிறப்பு** : இடர் களையும் பதிகம். பாடல் தோறும் 'இடர் களையாய்' என்ற குறிப்பைக் காணலாம்.

**பதிக முதல் பாடல்**

**மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்**
**பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுனைப்பே சினல்லால்**
**குறையுடையார் குற்றமோராய் கொள்கையினா லுயர்ந்த**
**நிறையுடையா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே** (1.52.1)

மறை உடையாய் தோல் உடையாய் வார்சடை மேல் வளரும்
பிறை உடையாய் பிஞ்ஞகனே என்று உனைப் பேசின் அல்லால்
குறை உடையார் குற்றம் ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறை உடையார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே

**பாடல் விளக்கம் :**

திருநெடுங்களம் மேவிய இறைவனே! வேதங்களைத் தனக்கு உடைமையாகக் கொண்டவனே! தோல் ஆடை உடுத்தவனே! நீண்ட சடை மேல், வளரும் இளம் பிறையைச் சூடியவனே! தலைக்கோலம் உடையவனே (பிஞ்ஞகனே)! என்று உம்மைப் பேசிப் புகழ்வதையன்றி வேறு ஒன்றும் செய்து அறியோம். நாங்கள் குறை உடையவர்களாயினும் நாங்கள் செய்த குற்றங்களைக் கருதாது, உமது கருணைத் திறத்தால் அருள் புரிபவர் நீவிர். அத்தகைய நீர், உம்மை வணங்கிப் போற்றும் கொள்கையால் நிறை உடையவராக விளங்கும் அடியவர்களின் இடரைக் களைந்து அருள் புரிவீராக.

**பதிக கடைசிப் பாடல்**

**நீடவல்ல வார்சடையான் மேயநெடுங் களத்தைச்**
**சேடர்வாழு மாமறுகிற் சிரபுரக்கோன் நலத்தால்**
**நாடவல்ல பனுவன்மாலை ஞானசம்பந்தன் சொன்ன**
**பாடல்பத்தும் பாடவல்லார் பாவம்ப றையுமே**

நீட வல்ல வார் சடையான் மேய நெடுங்களத்தைச்
சேடர் வாழும் மா மறுகின் சிரபுரக் கோன் நலத்தால்
நாட வல்ல பனுவல்மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல் பத்தும் பாட வல்லார் பாவம் பறையுமே 1.52.11

**பாடல் விளக்கம் :**

மேலும் மேலும் நீண்டு வளரத்தக்க சடைமுடியை உடைய சிவபிரான் எழுந்தருளிய திருநெடுங்களத்தை, பெரியோர் பலர் வாழும் பெரிய வீதிகளை உடைய சிரபுரம் என்னும் சீர்காழிப்பதியின் தலைவனாகிய ஞானசம்பந்தன் போற்றிப்பாடிய, நன்மைப் பொருளால் ஆராய்ந்து உணரத்தக்க இப்பாடல்கள் பத்தையும் பாட வல்லவர்களின் பாவங்கள் விலகும்.

வகுப்பு–3

## திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்

**திருமுறை** : நான்காம் திருமுறை **பதிகம் :** 81

**பாடல் அமைப்பு:** திருவிருத்தம் **இராகம் :** பைரவி **தாளம் :** ஆதி

**தலம்** : கோயில் (சிதம்பரம், தில்லை)

**இறைவன்** : சபாநாயகர், நடராசர் **இறைவி :** சிவகாமியம்மை

**பயன்** : இறைவன் அருள் வேண்டிப் பாட வேண்டிய பதிகம்.

**சிறப்பு** : தில்லை பெருமானின் திருநடனம் மற்றும் திருவருள் திறத்தைப் போற்றிப் பாடுவதாக அமைந்த திருவிருத்தம்.

**பதிக முதல் பாடல்**

**கருநட்ட கண்டனை யண்டத் தலைவனைக் கற்பகத்தைச்**
**செருநட்ட மும்மதி லெய்யவல் லானைச்செந் தீமுழங்கத்**
**திருநட்ட மாடியைத் தில்லைக் கிறையைச்சிற் றம்பலத்துப்**
**பெருநட்ட மாடியை வானவர் கோனென்று வாழ்த்துவனே (4.81.1)**

கரு நட்ட கண்டனை அண்டத் தலைவனை கற்பகத்தைச்
செரு நட்ட மும்மதில் எய்ய வல்லானை செந் தீ முழங்கத்
திரு நட்டம் ஆடியை தில்லைக்கு இறையை சிற்றம்பலத்துப்
பெரு நட்டம் ஆடியை வானவர் கோன் என்று வாழ்த்துவனே

**பாடல் விளக்கம் :**

கருமை நிலைபெற்ற நீலகண்டனாய், உலகங்களுக்குத் தலைவனாய், கற்பகம் போல அடியவர் வேண்டியன வழங்குபவனாய், போரில் ஈடுபட்ட அசுரர்களின் மும்மதில்களையும் அழிக்க வல்லவனாய், அங்கையில் செந்தீ ஏந்தி அழகிய கூத்தாடுபவனாய், தில்லை நகர்த்தலைவனாய்ச் சிற்றம்பலத்து தாண்டவம் ஆடிய பெருமானைத் "தேவர்கள் தலைவன்" என்று அடியேன் வாழ்த்துவேன்.

**நான்காவது பாடல்**

**குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்**
**இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே** **(4.81.4)**

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண் நீறும்
இனித்தம் உடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மா நிலத்தே

**பாடல் விளக்கம் :**

வளைந்த புருவங்களையும், கொவ்வைக்கனி போன்ற சிவந்த வாயிலே முகிழ்க்கும் புன்னகையையும், கங்கையால் ஈரமான சடைமுடியையும், பவளம் போன்ற சிவந்த திருமேனியில் அணிந்த பால் போன்று வெண்மையான வெண்ணீற்றுப் பூச்சினையும், பேரின்பம் நல்கும் தூக்கிய திருவடிகளையும் காணும் வாய்ப்பினைப் பெறுவதானால் இவ்வுலகில் மனிதராய்ப் பிறப்பெடுத்தலும் விரும்பத்தக்க செயலாகும்.

**பதிக கடைசிப் பாடல்**

**சாட வெடுத்தது தக்கன்றன் வேள்வியிற் சந்திரனை**
**வீட வெடுத்தது காலனை நாரணன் நான்முகனுந்**
**தேட வெடுத்தது தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்**
**ஆட வெடுத்திட்ட பாதமன் றோநம்மை யாட்கொண்டதே** **(4.81.10)**

சாட எடுத்தது தக்கன் தன் வேள்வியில் சந்திரனை
வீட எடுத்தது காலனை நாரணன் நான்முகனும்
தேட எடுத்தது தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்
ஆட எடுத்திட்ட பாதம் அன்றோ நம்மை ஆட்கொண்டதே

**பாடல் விளக்கம் :**

தக்கன் நிகழ்த்திய வேள்வியில் தனக்கு உரிய அவியைப் பெறுவதற்காக வந்து கலந்து கொண்ட சந்திரனைத் தேய்ப்பதற்காகத் தூக்கப்பட்டதும், கூற்றுவனை அழிப்பதற்கு உயர்த்தப்பட்டதும், திருமாலும் பிரமனும் காணமுடியாது தேடுமாறு பாதாளத்திற்குக் கீழும் வளர்ந்ததும், தில்லைச் சிற்றம்பலத்தில் கூத்தாடுவதற்காக உயர்த்தப்பட்டதும் ஆகிய சிவபெருமானுடைய இடது திருவடியன்றோ நம்மை அடிமையாகக் கொண்டதாகும்.

வகுப்பு–4

## சுந்தரர் அருளிய தேவாரம்

**திருமுறை :** ஏழாம் திருமுறை **பதிகம் :** 34

**பண் :** கொல்லி **இராகம் :** நவரோசு **தாளம் :** மிஸ்ரசாபு

**தலம் :** திருப்புகலூர்

**இறைவன்:** அக்னிபுரீசுவரர் **இறைவி :** கருந்தாழ் குழலியம்மை

**பயன் :** பொன், பொருள் வேண்டிப் பாட வேண்டிய பதிகம்.

**சிறப்பு :** தம்பிரான்தோழர், பரவைநாச்சியார் பங்குனி உத்திரத் திருநாளில் செய்யும் தானதருமங்களுக்குப் பொருள் பெற எண்ணித் திருவாரூரிலிருந்து திருப்புகலூர் சென்று தொழுது கோயிலின் முன்புறம் செங்கற்களைத் தலைக்கு உயரமாக வைத்து இறையருளால் துயின்றார். துயிலெழுந்தபோது செங்கற்கள் பொன்னாகியிருப்பதைக் கண்டு இறையருளை எண்ணி வியந்து பாடியருளியது இத்திருப்பதிகம்.

புகலூர் பெருமானைப் பாட, வேண்டிய பொன், பொருள், ஆடைகள் வழங்குவான் என்ற கருத்து தோன்ற பாடி அருளிய திருப்பதிகம். அதனால், மண விழாவில் மணமக்களுக்கு புத்தாடைகள் வழங்கும்போது பெரியோர் இத்திருப்பாடலை ஓதி வழங்கும் மரபுண்டு.

**பதிக முதல் பாடல்**

**தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ் சார்கி னுந்தொண்டர் தருகிலாப்**
**பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்**
**இம்மை யேதருஞ் சோறுங் கூறையும் ஏத்த லாம்இடர் கெடலுமாம்**
**அம்மை யேசிவ லோகம் ஆள்வதற் கியாதும் ஐயுற வில்லையே (7.34.1)**

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும் சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும் ஏத்தல் ஆம் இடர் கெடலும் ஆம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே

**பாடல் விளக்கம் :**

புலவர்களே! தமக்கு அடிமைகளாய்த் தம்மையே புகழ்ந்து, தமக்கு விருப்பமானவற்றையே சொல்லி, தம்மையே துணையாகச் சார்ந்து நிற்பினும், அங்ஙனம் சார்ந்தவர்க்கு ஒன்றுந் தருங்குணம் இல்லாத பொய்மையுடைய மானுடரைப் பாடாமல் திருப்புகலூரில் எழுந்தருளிய என் அப்பன் சிவபெருமானைப் பணிந்து பாடுங்கள். அவ்வாறு பாடினால் இம்மையில் வேண்டுவனவாகிய நல்ல உணவும், உடையும், பிறவும் அவன் தருவான். நமது துன்பங்களைப் போக்குவான். மறுமையிலும் சிவலோகத்தை ஆளுவதற்கு யாதும் ஒரு ஐயமில்லை.

**பதிக கடைசிப் பாடல்**

**செறுவி னிற்செழுங் கமலம் ஓங்குதென் புகலூர் மேவிய செல்வனை**
**நறவம் பூம்பொழில் நாவ லூரன் வனப்பகை யப்பன் சடையன்றன்**
**சிறுவன் வன்றொண்டன் ஊரன் பாடிய பாடல் பத்திவை வல்லவர்**
**அறவ னாரடி சென்று சேர்வதற் கியாதும் ஐயுற வில்லையே** **(7.34.10)**

செறுவினில் செழுங் கமலம் ஓங்கு தென்புகலூர் மேவிய செல்வனை
நறவம் பூம்பொழில் நாவலூரன் வனப்பகை அப்பன் சடையன்தன்
சிறுவன் தொண்டன் ஊரன் பாடிய பாடல் பத்து இவை வல்லவர்
அறவனார் அடி சென்று சேர்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே

**பாடல் விளக்கம் :**

வயல்களில் செந்தாமரைகள் செழிக்கின்ற அழகிய திருப்புகலூரில் விரும்பி எழுந்தருளியுள்ள செல்வனாகிய சிவபெருமானை, திருநாவலூரனும், வனப்பகைக்குத் தந்தையும், சடையனார்க்கு மகனும், வன்றொண்டனும் ஆகிய நம்பியாரூரன் பாடிய இப்பத்துப் பாடல்களை பாட வல்லவர்கள், அறவடிவினனாகிய அப்பெருமானது அரிய திருவடிகளில் சென்று சேர்வர் என்பதற்கு ஐயம் எதுவும் இல்லை.

# அற்புதப் பதிகங்கள் – 1

வகுப்பு–5

## திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**திருமுறை :** முதலாம் திருமுறை **பதிகம் :** 54

**பண் :** பழந்தக்கராகம் **இராகம் :** ஆரபி **தாளம் :** ஆதி

**தலம்:** திருஓத்தூர்

**இறைவன்:** வேதபுரீசுவரர் **இறைவி :** இளமுலை நாயகியம்மை

**பயன் :** இறைவன் புகழைப் பாடி ஞானமும் வீடும் பெற ஓத வேண்டிய பதிகம்.

**சிறப்பு :** ஆண் பனையினைப் பெண் பனையாக மாற்ற திருஞானசம்பந்தர் பாடிய திருப்பதிகம்.

திருஞானசம்பந்தர் திருஓத்தூர் அடைந்து இறைவனைப் போற்றினார். சிவனடியார் ஒருவர் அடியவர்க்கெனத் தான் வளர்த்த பனைகள் அனைத்தும் ஆண்பனைகளாக இருத்தலையும் சமணர்கள் சிலர் சிவனருளால் காய்க்க வைக்க முடியுமா? என ஏளனமாகக் கேட்டதையும் ஞான சம்பந்தரிடம் கூற அவர் ஆலயம் சென்று வணங்கி, 'பூத்தேர்ந்தாயன' என்னும் பதிகம் பாடிய அளவில் ஆண்பனைகள் அனைத்தும் பெண் பனைகளாய்க் குலையீன்றன. அடியவர் அதிசயித்தனர். சமணர்கள் பிழைபொறுக்க வேண்டியதோடு சைவ சமயத்தின் சிறப்பினை அறிந்து சைவ சமயத்திற்கு மதம் மாறி ஞானசம்பந்தரைப் போற்றினர்.

**பதிக முதல் பாடல்**

**பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி**
**ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்**
**ஓத்தூர் மேய வொளிமழு வாளங்கைக்**
**கூத்தீ ரும்ம குணங்களே** (1.54.1)

பூத் தேர்ந்து ஆயன கொண்டு நின் பொன் அடி
ஏத்தாதார் இல்லை எண்ணுங்கால்
ஓத்தூர் மேய ஒளி மழுவாள் அங்கைக்
கூத்தீர் உம குணங்களே

**பாடல் விளக்கம் :**

திருஓத்தூரில், அழகிய கையில் ஒளி பொருந்திய மழுவாகிய வாளை ஏந்தியவராய் எழுந்தருளிய கூத்தரே, இவ்வுலகில் நாம் ஆராய்ந்து கண்டறிந்த உண்மையாதெனின் பூசைக்குரிய நறுமலர்களைத் தேர்ந்து பறித்தும், பூசைப் பொருட்களைச் சேகரித்துக் கொண்டும், உம்முடைய குணநலங்களைப் போற்றி, பொன் போன்ற திருவடிகளை ஏத்தி வணங்காதார் இல்லை.

## பதிக கடைசிப் பாடல்

**குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்**
**அரும்பு கொன்றை யடிகளைப்**
**பெரும்பு கலியுண் ஞானசம்பந் தன்சொல்**
**விரும்பு வார்வினை வீடே (1.54.11)**

குரும்பை ஆண்பனை ஈன் குலை ஓத்தூர்
அரும்பு கொன்றை அடிகளைப்
பெரும் புகலியுள் ஞானசம்பந்தன் சொல்
விரும்புவார் வினை வீடே

## பாடல் விளக்கம் :

திருஓத்தூரில், ஆண் பனைகள் குரும்பைக் குலைகளை ஈனும் பெண் பனையாக மாற்றிய அற்புதத்தைச் செய்தருளிய கொன்றை அரும்பும் சடைமுடி உடைய இறைவரை, பெருமை மிக்க திருப்புகலி என்னும் பெயருடைய சீர்காழிப்பதியுள் தோன்றிய ஞானசம்பந்தன் போற்றியுரைத்த இப்பாமாலையை விரும்பும் அன்பர்களின் வினைகள் அழிந்து வீடு பேறு அடைவர்.

வகுப்பு–6

## திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்

**திருமுறை :** நான்காம் திருமுறை **பதிகம் :** 003

**பண் :** காந்தாரம் **இராகம் :** நவரோசு **தாளம் :** ரூபகம்

**தலம்:** திருவையாறு

**இறைவன்:** ஐயாறப்பர் **இறைவி :** அறம்வளர்த்த நாயகி

**பயன் :** சிவ சிந்தனையில் இருக்க ஓத வேண்டிய பதிகம்

**சிறப்பு :** திருநாவுக்கரசர் கயிலைக் காட்சி கண்ட போது பாடிய பதிகம்

திருநாவுக்கரசர் கயிலை நாதனை தரிசிக்க எண்ணி காடு மேடு மலை மணல் பரப்பு எனப் பாராமல் இரவுபகலாய் நடந்து சென்றார். கால்களால் நடக்கலற்றாது கைகளால் தாவிச் சென்றார். கைகளும் மணிக்கட்டு வரை தேய்ந்தன. மார்பினால் உந்திச் சென்றார். என்புகளும் தேய்ந்து முறிந்தன. எப்படியும் கயிலைநாதனைக் கண்டு இன்புற வேண்டும் என்ற வேட்கையால் புரண்டு புரண்டு சென்று உடலுறுப்புக்கள் முழுதும் தேய்ந்து ஓரிடத்தில் செயலற்றுத் தங்கிக் கிடந்தார். அப்போது சிவபெருமான் ஒரு தவ முனிவராய் அவர் முன் தோன்றி எங்கே செல்கிறீர் என்று வினவினார். அப்பரும் அதற்கு இறைவனைத் திருக்கயிலையில் கண்டு தரிசித்து இன்புற செல்கிறேன் என்று கூறினார். அதற்கு முனிவர் 'திருக்கயிலை மானிடர் சென்றடைதற்கு எளிதோ? திரும்பிச் செல்லும், இதுவே தக்கது' என்று கூறினார். அதற்கு அப்பரும், 'கயிலையில் என்னை ஆளும் நாயகன் இருக்கை கண்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்' என்று உறுதி மொழிந்தார். முனிவராய் வந்த பெருமான் மறைந்து அசரீரியாய் 'நாவினுக்கரசனே! எழுந்திரு' என்று கூறினன். அப்பொழுதே உடல் நலம் பெற்று நாவுக்கரசர் எழுந்து பணிந்து 'அண்ணலே, கயிலையில் நின்திருக்கோலம் நண்ணி நான்தொழ நயந்து அருள்புரி' எனப் பணிந்தார். பெருமான் மீண்டும் அசரீரியாய் 'இத் தடாகத்தில் மூழ்கித் திருவையாற்றை அடைந்து நாம் திருக்கயிலையில் வீற்றிருக்கும் காட்சியைக் காண்க' என்று கூறினன். அவ்வாறே அப்பரும் திருவைந்தெழுத்தை ஓதிக்கொண்டே அத்தடாகத்தில் மூழ்கி எழுந்தனர். திருவையாற்றில் உள்ள தடாகத்தில் திருநாவுக்கரசர் எழுந்தார். உலகம் வியப்பக் கரையேறி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். ஐயாற்று இறைவரை வணங்கப் புகுமளவில் அங்குள்ள உயிர்கள் அனைத்தும் சத்தியும் சிவமுமாம் காட்சிகளைக் காட்டின. அப்பெருங் கோயில் கயிலைங்கிரியாய்க் காட்சி அளித்தது.

### பதிக முதல் பாடல்

**மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்**
**போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்**
**யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது**
**காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்**
**கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்** (4.3.1)

மாதர்ப் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல் ஐயார் அடைகின்ற போது
காதன் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்

**பாடல் விளக்கம் :**

விரும்பத்தக்க பிறையை முடியில் மாலையாகச் சூடிய பெருமானைப் பார்வதியோடும் இணைத்துப் பாடியவர்களாய் அருச்சிக்கும் பூவும் அபிடேக நீரும் தலையில் தாங்கித் திருக்கோயிலை நோக்கிப் பெருமானைத் துதித்த வண்ணம் புகும் அடியவர் பின் சென்ற அடியேன், கயிலை மலைக்குச் சென்றபோது ஏற்பட்ட உறுப்புஅழிவின் சுவடு ஏதும் தோன்றாத வகையில் தீங்கு நீங்கிய யாக்கை கொண்டு, கயிலை மலையிலிருந்து கால்சுவடு படாமல் திருவையாற்றை அடைந்த பொழுது, விருப்பத்திற்கு உரிய இளைய பெண்யானையோடு ஆண்யானை சேர்ந்து இரண்டுமாக வருவனவற்றைக் கண்டு, அவற்றை அடியேன் சத்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம், சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதனவற்றைக் கண்ட பேறு பெற்றுவனாக விளங்குகின்றேன்.

**பதிக கடைசிப் பாடல்**

**வளர்மதிக் கண்ணியி னானை வார்குழ லாளொடும் பாடிக்**
**களவு படாததொர் காலங் காண்பான் கடைக்கணிற் கின்றேன்**
**அளவு படாததொ ரன்போ டையா றடைகின்ற போது**
**இளமண நாகு தழுவி யேறு வருவன கண்டேன்**
**கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்** **(4.3.11)**

வளர்மதிக் கண்ணியினானை வார்குழலாளொடும் பாடிக்
களவு படாததொர் காலம் காண்பான் கடைக் கணிற்கின்றேன்
அளவு படாததொர் அன்போடு ஐயார் அடைகின்ற போது
இளமண நாகு தழுவி ஏறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்

**பாடல் விளக்கம் :**

சிவபெருமான் வளரும் பிறைச் சந்திரனைச் சூடி உமையம்மையை உடனாகக் கொண்டு திகழ்பவர். அப்பெருமானைக் கண்டு தொழ வேண்டும் என்னும் வேட்கையில் பல காலம் பாடிப் போற்றித் தோற்றம் பெறாத நிலையில், பேரன்போடு ஐயாறு என்னும் தலத்தை அடைகின்ற போது, எருதானது தன் துணையான பசுவோடு இணைந்து இரண்டுமாய் வருவனவற்றைக் கண்டேன். அவற்றை அடியேன் சத்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம் , சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதனவற்றைக் கண்ட பேறு பெற்றுவனாக விளங்குகின்றேன்.

வகுப்பு–7

## சுந்தரர் அருளிய தேவாரம்

**திருமுறை :** ஏழாம் திருமுறை **பதிகம் :** 20

**பண் :** நட்டராகம் **இராகம் :** பந்துவராளி தாளம் :

**தலம்:** திருக்கோளிலி

**இறைவன்:** கோளிலி நாதர், பிரம்மபுரீசுவரர் **இறைவி :** வண்டமர்பூங்குழலி

**பயன் :** உணவுப் பொருட்கள் குறைவின்றி பெற ஓத வேண்டிய பதிகம்

**சிறப்பு :** இத் திருப்பதிகம் குண்டையூரிற் பெற்ற நெல்லினைத் திருவாரூருக்கு எடுப்பிக்க ஆள் வேண்டுங்கால் "அட்டித் தரப்பணியே" என நெல் மலைகளை அட்டித் தருவதற்காக ஆள் வேண்டி அருளிய திருப்பதிகம். குண்டையூரில் வானளாவி இருந்த நெற் குவியலை இறைவன் ஆணையின்படி பூத கணங்கள் திருவாரூரில் கொண்டு குவித்தன.

### பதிக முதல் பாடல்

**நீள நினைந்தடியேன் உனை நித்தலுங் கைதொழுவேன்**
**வாளன கண்மடவா ளவள் வாடி வருந்தாமே**
**கோளிலி எம்பெருமான் குண்டை யூர்ச்சில நெல்லுப் பெற்றேன்**
**ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே** (7.20.1)

நீள நினைந்து அடியேன் உமை நித்தலும் கை தொழுவேன்
வாள் அன கண் மடவாள் அவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச் சில நெல்லுப் பெற்றேன்
ஆள் இலை எம்பெருமான் அவை அட்டித்தரப் பணியே

### பாடல் விளக்கம் :

திருக்கோளிலியில் எழுந்தருளியிருக்கும் எம் பெருமானே, வாள்போலுங் கண்களையுடைய மடவாளாகிய என் இல்லாள் தனது வாழ்க்கையை நடத்த இயலாமை கருதி மெலிந்து வருந்தாதபடி குண்டையூரிலே சில நெல்லுப் பெற்றேன். அவைகளை அவள்பாற் சேர்ப்பிக்க எனக்கு ஆளில்லை. அடியேன், எஞ்ஞான்றும் உன்னையே நினைத்து நாள்தோறும் வணங்குந் தொழிலை உடையேன்; வேறு யாரை வேண்டுவேன்! அவைகளை அங்குச் சேர்ப்பித்து உதவ, நீ, எவர்க்கேனும் கட்டளையிட்டருள்.

.

**பதிக கடைசிப் பாடல்**

**கொல்லை வளம்புறவிற் றிருக் கோளிலி மேயவனை**
**நல்லவர் தாம்பரவுந் திரு நாவல வூரனவன்**
**நெல்லிட ஆட்கள்வேண்டி நினைந் தேத்திய பத்தும்வல்லார்**
**அல்லல் களைந்துலகில் அண்டர் வானுல காள்பவரே (7.20.10)**

கொல்லை வளம்புறவில் திருக் கோளிலி மேயவனை
நல்லவர் தாம்பரவும் திரு நாவல ஊரனவன்
நெல்லிட ஆட்கள்வேண்டி நினைந்து ஏத்திய பத்தும்வல்லார்
அல்லல் களைந்து உலகில் அண்டர் வானுலகு ஆள்பவரே

**பாடல் விளக்கம் :**

வளம் மிக்க முல்லை நிலத்தையுடைய திருக்கோளிலியில் விரும்பியிருக்கின்ற பெருமானை, நல்லவர்கள் துதிக்கின்ற திருநாவலூரான், தனக்கு நெல் எடுக்க ஆட்களைத் தருமாறு வேண்டி, மனம் பொருந்திப் பாடிய இப் பத்துப் பாடல்களையும் பாடவல்லவர், இம்மையில் தங்கட்கு உள்ள இடர்கள் நீங்கப்பெற்று, அம்மையில் தேவர்கட்கு மேலாய மேலுலகத்தை ஆள்வார்கள். (கொல்லை – முல்லை நிலம் )

# சிறப்புப் பதிகங்கள் – 2

வகுப்பு–8

## திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**திருமுறை :** மூன்றாம் திருமுறை **பதிகம் :** 004

**பண் :** காந்தாரபஞ்சமம் **இராகம் :** கேதார கௌளை **தாளம் :**

**தலம்:** திருஆவடுதுறை

**இறைவன்:** மாசிலாமணியீசர் **இறைவி :** ஒப்பிலாமுலையம்மை

**பயன் :** பொருளும் அருளும் பெற வேண்டி ஓத வேண்டிய திருப்பதிகம்.

**சிறப்பு :** நாலடிமேல் வைப்பு – உலக நன்மைக்காக வேள்வி நடத்த இறைவனிடம் பொன் வேண்டிப் பாடிய பதிகம்.

சிவபாத இருதயர், தான் வேள்வி செய்தற்கு ஏற்ற காலம் இதுவாகும். அதற்குப் பொருள் வேண்டுமென ஞானசம்பந்தரிடம் தெரிவித்தார். ஞானசம்பந்தர் தந்தையாருக்கு அளிக்கப் பொருள் இல்லையே என வருந்தியவராய் 'இடரினும் தளரினும்' என்ற திருப்பதிகத்தால் இறைவனிடம் விண்ணப்பித்தார். சிவபூதம் ஒன்று ஆயிரம் பொன்னடங்கிய பொற்கிழி ஒன்றை ஆலயத்தில் மாசிலாமணியீசர் சந்நிதியில் உள்ள பீடத்தில் வைத்து 'இப்பொற்கிழி எடுக்க எடுக்கக் குறையாத உலவாக் கிழி. இறைவர் இக்கிழியை உமக்கு வழங்குமாறு அளித்துள்ளார்' எனக் கூறி மறைந்தது. ஆளுடைய பிள்ளையார் உலவாக் கிழியைத் தலைமேற் கொண்டு போற்றி அதனைத் தந்தையார் கையில் கொடுத்து, இக்கிழியின் பொன்னைக் கொண்டு தந்தையாரையும் கழுமலத்திலுள்ள ஏனைய அந்தணர்களையும் நல் வேள்விகள் பலவும் செய்யுமாறு கூறி வழி அனுப்பி வைத்தார்.

### பதிக முதல் பாடல்

**இடரினும் தளரினும் எனதுறுநோய்**
**தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்**
**கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை**
**மிடறினில் அடக்கிய வேதியனே**
**இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்**
**அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே** (3.4.1)

இடரினும் தளரினும் எனது உறு நோய்
தொடரினும் உன கழல் தொழுது எழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளும் ஆறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன் அருள் ஆவடுதுறை அரனே

## பாடல் விளக்கம் :

திருப்பாற்கடலில், அமுதம் வேண்டி கடைந்தபோது தோன்றிய நஞ்சினை அனைவரையும் காக்கும் பொருட்டு, கழுத்தில் அடக்கிக் காத்த வேதத்தின் தலைவனே! வாழ்க்கையில் இடையூறு ஏற்பட்டுத் துன்பம் உண்டானாலும், இளமை நீங்கி மூப்பினால் தளர்ச்சியுற்றாலும், தீவினைப் பயனால் நோய் தொடர்ந்து வந்தாலும், உன் திருவடிகளைத் தொழுது வணங்குவேன். திருவாவடுதுறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே! அத்தகைய அடியேனை நீ ஆட்கொள்ளும் தன்மை இதுவோ? வேள்விக்குத் தேவைப்படுகின்ற பொருளை நீ எனக்குத் தரவில்லையானால் அஃது உன் திருவருளுக்கு அழகாகுமா? ஆகவே நீ எனக்கு அருள் புரிய வேண்டும்.

## பதிக கடைசிப் பாடல்

**அலைபுனல் ஆவடு துறைஅமர்ந்த**
**இலைநுனை வேற்படை யெம்இறையை**
**நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன**
**விலையுடை அருந்தமிழ் மாலைவல்லார்**
**வினையாயினநீங் கிப்போய் விண்ணவர் வியனுலகம்**
**நிலையாகமுன் ஏறுவர்நிலமிசை நிலையிலரே (3.4.11)**

அலை புனல் ஆவடுதுறை அமர்ந்த
இலை நுனை வேல்படை எம் இறையை,
நலம் மிகு ஞானசம்பந்தன் சொன்ன
விலை உடை அருந்தமிழ்மாலை வல்லார்
வினை ஆயின நீங்கிப் போய் விண்ணவர் வியன் உலகம்
நிலை ஆக முன் ஏறுவர் நிலம்மிசை நிலை இலரே

## பாடல் விளக்கம் :

அலைகளையுடைய நதியாகிய காவிரியின் நீரால் வளம் பொருந்திய திருவாவடுதுறையில் வீற்றிருக்கும் இலை போன்ற நுனியையுடைய திரிசூலப் படையேந்திய எம் இறைவனைப் பற்றி, உலக நலன்களை விரும்பிய ஞானசம்பந்தன் அருளிய சிறப்புடைய அருந்தமிழ் மாலையாகிய இத்திருப்பதிகத்தை ஓதுபவர்கள் வினை யாவும் நீங்கப் பெற்று விரிந்த விண்ணுலகில் நிலையாக வீற்றிருப்பர். துன்பம் தரும் இம்மண்ணுலகில் மீண்டும் வந்து பிறவார்.

வகுப்பு–9

## திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்

**திருமுறை :** ஆறாம் திருமுறை **பதிகம் :** 38

**பண் :** திருத்தாண்டகம் **இராகம் :** அரிகாம்போதி **தாளம் :** ஆதி

**தலம்:** திருவையாறு

**இறைவன் :** ஐயாறப்பர், செம்பொற்ஜோதீசுவரர் **இறைவி :** அறம்வளர்த்தநாயகி

**பயன் :** இறைவனைப் போற்றி பாடுதல்

**சிறப்பு :** இத்திருப்பதிகம் இறைவனது அருட்குணம், அருட்செயல் என்பவற்றை வகுத்தெடுத்துப் பல தொடர்க் கோவையாக அருளிச்செய்தது.

**பதிக முதல் பாடல்**

**ஓசை யொலியெலா மானாய் நீயே**
**உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே**
**வாச மலரெலா மானாய் நீயே**
**மலையான் மருகனாய் நின்றாய் நீயே**
**பேசப் பெரிதும் இனியாய் நீயே**
**பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே**
**தேச விளக்கெலா மானாய் நீயே**
**திருவையா றகலாத செம்பொற் சோதீ (6.38.1 )**

ஓசை ஒலி எலாம் ஆனாய் நீயே
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே
வாசமலர் எலாம் ஆனாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடி என்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கு எலாம் ஆனாய் நீயே
திரு ஐயாறு அகலாத செம்பொன்சோதீ

**பாடல் விளக்கம் :**

சிவபெருமானே! நீ, பொருளில்லாத வெற்று ஓசையாகவும் பொருளுடைய எழுத்து, சொல் என்பனவாக உள்ள ஒலியாகவும் உள்ளாய். இவ்வுலகுக்குத் தன்னிகரில்லாத் தலைவனாக உள்ளாய். மலரில் மணம் போல உலகமெங்கும் பரவியுள்ளாய். இமவான் மருமகனாய் உள்ளாய். உன் பெருமையைப் பேசுதற்கு இனியனாய் உள்ளாய். எனக்குத் தலைவனாய் உன் திருவடிகளை என் தலைமீது வைத்தாய். உலகில் உள்ள ஞாயிறு, திங்கள், விண்மீன்கள் முதலிய யாவுமாகியுள்ளாய். அத்தகைய நீ திருவையாற்றை விட்டு நீங்காத செம்பொன் போன்ற ஒளியானவன்.

## பதிக கடைசிப் பாடல்

**ஆரு மறியா இடத்தாய் நீயே**
**ஆகாயந் தேரூர வல்லாய் நீயே**
**பேரும் பெரிய இலங்கை வேந்தன்**
**பெரிய முடிபத் திறுத்தாய் நீயே**
**ஊரும் புரமூன்றும் அட்டாய் நீயே**
**ஒண்டா மரையானும் மாலுந் கூடித்**
**தேரும் அடியென்மேல் வைத்தாய் நீயே**
**திருவையா றகலாத செம்பொற் சோதீ (6.38.11)**

ஆரும் அறியா இடத்தாய் நீயே
ஆகாயம் தேர் ஊர வல்லாய் நீயே
பேரும் பெரிய இலங்கை வேந்தன்
பெரிய முடிபத்து இறுத்தாய் நீயே
ஊரும் புரம் மூன்றும் அட்டாய் நீயே
ஒண் தாமரையானும் மாலும் கூடித்
தேரும் அடி என்மேல் வைத்தாய் நீயே
திரு ஐயாறு அகலாத செம்பொன்சோதீ

## பாடல் விளக்கம் :

ஒருவரும் அறிய முடியாத உயர் நிலையில் உள்ளாய். வானத்திலே தேரைச் செலுத்தவல்லமை உடையாய். பெரிய புகழை உடைய இராவணனுடைய பத்துத் தலைகளையும் நசுக்கினாய். வானத்தில் உலாவிய மூன்று மதில்களையும் அழித்தாய். பிரமனும் திருமாலும் கூடித்தேடும் அடிகளை என் தலைமேல் வைத்தாய். அத்தகைய நீ திருவையாற்றை விட்டு நீங்காத செம்பொன் போன்ற ஒளியானவன்.

வகுப்பு–10

## சுந்தரர் அருளிய தேவாரம்

**திருமுறை :** ஏழாம் திருமுறை **பதிகம் :** 39

**பண் :** கொல்லிகௌவாணம் **இராகம் :** அரிகாம்போதி **தாளம் :** ஆதி

**தலம்:** திருஆரூர்

**இறைவன் :** வன்மீகநாதர், புற்றிடங்கொண்டார்

**இறைவி :** கமலாம்பிகை, அல்லியம்பூங்கோதை

**பயன் :** இறையடியார் பெருமை பாடும் திருப்பதிகம். இறையருள் பெற ஓத வேண்டியது.

**சிறப்பு :** சுந்தரருக்கு சிவ பெருமானே அடி எடுத்துக் கொடுக்க அவர் தேவாசிரிய மண்டபத்தை அடைந்து அங்கு எழுந்தருளியிருந்த அடியவர்களை வணங்கி அடியார் பெருமையை விளக்கித் திருத்தொண்டத்தொகை என்னும் திருப்பதிகத்தை அருளிச் செய்தார்.

**பதிக முதல் பாடல்**

**தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்**
**திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்**
**இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்**
**இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்**
**வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்**
**விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்**
**அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்**
**ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே** (7.39.1)

தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்
திரு நீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான் தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிக வல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்
விரி பொழில் சூழ் குன்றையார் விறல் மிண்டற்கு அடியேன்
அல்லி மென் முல்லை அம்தார் அமர் நீதிக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே

## பாடல் விளக்கம் :

தில்லை என்னும் சிதம்பரத்தில் வாழ்கிற அந்தணர்களுடைய அடியார்க்கும் நான் அடியேன். திருநீலகண்டர் என்னும் பெயருடைய குயவனார்க்கும் நான் அடியேன். தன்னிடம் உள்ளதை இல்லை என்று மறைக்காமல் வழங்கும் இயற்பகைக்கும் நான் அடியேன். இளையான்குடி மாறன் என்னும் அடியார்க்கும் நான் அடியேன். வெற்றி காணும் வலிமை பெற்றவரும், மெய்த்திருவேடமே மெய்ப்பொருள் என்ற உணர்வு உடையவருமான மெய்ப்பொருள் நாயனாருக்கும் நான் அடியேன். சோலைகள் சூழ்ந்த செங்குன்றூரில் வாழ்ந்த விறல்மிண்டற்கு நான் அடியேன். முல்லை மாலையணிந்த அமர்நீதிக்கு நான் அடியேன். நம்பியாரூரனாகிய நான் திருவாரூரின் பெருமானுக்கு எப்போதும் அடிமையே.

## பதிக கடைசிப் பாடல்

**மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்**
**வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்**
**தென்னவனாய் உலகாண்ட செங்கணாற் கடியேன்**
**திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்**
**என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்**
**இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்**
**அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்**
**ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே (7.39.11)**

மன்னிய சீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகு ஆண்ட செங்கணாற்கு அடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க்கு அடியேன்
என்னவன் ஆம் அரன் அடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவலூர்க் கோன்
அன்னவன் ஆம் ஆரூரன் அடிமை கேட்டு உவப்பார்
ஆரூரில் அம்மானுக்கு அன்பர் ஆவாரே

## பாடல் விளக்கம் :

திருநின்ற ஊரில் பிறந்த அந்தணர் பூசலார் நாயனாருக்கும் பாண்டிய நாட்டு அரசியாகிய மங்கையர்க்கரசிக்கும் நேச நாயனாருக்கும் அடியேன். யானைகள் ஏறிச் செல்ல இயலா வண்ணம் மாடக் கோயில்களைக் கட்டிய கோச்செங்கண் சோழர்க்கும் அடியேன். பாணர் குலத்தில் பிறந்த திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கும் அடியேன். என்னுடைய தந்தையாராகிய சிவன் அடியை அடைந்த சடையனார்க்கும், என் தாயாராகிய இசைஞானியார்க்கும் அடியேன். நம்பியாரூரனாகிய நான் திருவாரூர் பெருமானுக்கு எப்போதும் அடிமையே. நான் அடிமை என்று பணிந்து பாடிய அடியார் பெருமையை மகிழ்ந்து கேட்கும் அனைவரும் திருவாரூரில் உள்ள இறைவனுக்கு அன்பர் ஆவர்.

# அற்புதப் பதிகங்கள் –2

வகுப்பு–11

## திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**திருமுறை :** இரண்டாம் திருமுறை **பதிகம் :** 66

**பண் :** காந்தாரம் **இராகம் :** நவரோசு **தாளம் :** ஏகம்

**தலம் :** திருஆலவாய் என்கிற மதுரை

**இறைவன்:** சொக்கலிங்கர், திருஆலவாயப்பன்

**இறைவி :** அங்கயற்கண்ணி, மீனாட்சியம்மை

**பயன் :** சுரம் முதலிய வெப்பு நோய்கள் நீங்க ஓத வேண்டிய பதிகம்

**சிறப்பு :** திருநீற்றுப் பதிகம் – பாண்டிய மன்னனின் வெப்பு நோய் தீர திருஞானசம்பந்தர் பாடி அருளிய திருப்பதிகம்.

**பதிக முதல் பாடல்**

**மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு**
**சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு**
**தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு**
**செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே (2.66.1)**

மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர்வாய் உமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறே

**பாடல் விளக்கம் :**

சிவந்த பவளம் போன்ற வாயினை உடைய உமைபங்கன் ஆகிய திருஆலவாயில் எழுந்தருளியிருக்கும் சிவபிரானது திருநீறு, மந்திரம் போல நினைப்பவரைக் காப்பது. வானவர் தம் மேனிமேல் பூசிக்கொள்ளப்படுவது. அழகு தருவது. எல்லா நூல்களாலும் புகழப்படுவது. ஆகமங்களில் புகழ்ந்து சொல்லப்படுவது. சிவமயத்தில் நிலைத்துள்ளது.

**பதிக கடைசிப் பாடல்**

**ஆற்ற லடல்விடை யேறு மால வாயான்றிரு நீற்றைப்**
**போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்**
**தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்**
**சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே (2.66.11)**

ஆற்றல் அடல் விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றி புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றி தென்னன் உடல் உற்ற தீப்பிணி ஆயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே

**பாடல் விளக்கம் :**

ஆற்றலும், பிறரைக் கொல்லும் வலிமையும் உடைய விடையின் மீது ஏறிவரும் ஆலவாயான் திருநீற்றைப் போற்றிப் புகலியில் விளங்கும் பூசுரனாகிய ஞானசம்பந்தன் சைவத்தின் பெருமையைத் தெளிவித்துப் பாண்டியன் உடலில் பற்றிய தீமை விளைத்த பிணி தீருமாறு சாற்றிய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் ஓதவல்லவர் நல்லவராவார்.

வகுப்பு–12

## திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்

**திருமுறை :** ஐந்தாம் திருமுறை **பதிகம் :** 10

**பண் :** திருக்குறுந்தொகை **இராகம்:**மாயாமாளவகௌளை **தாளம்:**

**தலம் :** திருமறைக்காடு

**இறைவன் :** திருமறைக்காடர், வேதாரண்யேசுவரர்

**இறைவி :** யாழைப்பழித்த மென்மொழியம்மை, வேதநாயகி

**பயன்:** நெடுநாளாயும் நிறைவேறாத செயல்கள் நிச்சயம் செயல்பட ஓத வேண்டிய பதிகம்

**சிறப்பு :** மறைகள் திருக்காப்பு செய்த கோயில் கதவுகள், திறக்கும்படி பாடி அருளிய பதிகம். கண்களால் உமது திருக்காட்சியைக் காணத் திருக் கதவைத் திறந்தருள்வீராக என வேண்டியது இத் திருப்பதிகம்.

**பதிக முதல் பாடல்**

**பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ**
**மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ**
**கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்**
**திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே** (5.10.1)

பண்ணின் நேர் மொழியாள் உமைபங்கரோ
மண்ணினார் வலம்செய்ம் மறைக்காடரோ
கண்ணினால் உமைக் காணக் கதவினைத்
திண்ணம் ஆகத் திறந்து அருள் செய்ம்மினே

**பாடல் விளக்கம் :**

பண்ணையொத்த மொழியாளாகிய உமை அம்மையை ஒரு பாகமாகக் கொண்டவரே! மண்ணுலகத்தவர் வலம் வந்து தொழுதேத்தும் மறைக்காட்டுறையும் பெருமானே! அடியேன் என்கண்களால் உம்மைக் காணுமாறு, வேதங்களால் அடைக்கப் பெற்ற இக்கதவினைத் திண்ணமாகத் திறந்து அருள்செய்வீராக.

## பதிக கடைசிப் பாடல்

**அரக்க னைவிர லாலடர்த் திட்டநீர்**
**இரக்க மொன்றிலீ ரெம்பெரு மானிரே**
**சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ**
**சரக்க விக்கத வந்திறப் பிம்மினே** (5.10.11)

அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர்
இரக்கம் ஒன்று இலீர் எம்பெருமானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ் மறைக்காடரோ
சரக்க இக் கதவம் திறப்பிம்மினே

## பாடல் விளக்கம் :

புன்னை மரங்கள் பெருகிச் சூழ்ந்து மலர்களைச் சொரியும் மறைக்காட்டில் உறையும் பெருமானே! இராவணனை விரலால் அடர்த்திட்ட நீர் எளியேன் பால் இரக்கம் கொஞ்சமும் இல்லாதவராய் உள்ளீர்! எம்பெருமானீரே! விரைந்து, இக்கதவினைத் திறக்குமாறு அருள் செய்வீராக!

(பத்துத் திருப்பாடல்கள் பாடியும் கதவு திறவாமையைக் கண்ட அப்பர் பெருமான் இரக்கமில்லையோ! எனக்கூறிய இப் பாடலின் உரை கேட்டு நாவரசரின் பாமாலையின் இசையில் ஈடுபட்டிருந்த இறைவன் விரைந்து கதவைத் திறந்தனன்.)

வகுப்பு–13

## நம்பியாரூரர் எனும் சுந்தரர் அருளிய தேவாரம்

**திருமுறை** :ஏழாம் திருமுறை **பதிகம்** : 061

**பண் :** தக்கேசி **இராகம் :** காம்போதி **தாளம் :** ஆதி

**தலம் :** திருக்கச்சி ஏகம்பம் காஞ்சிபுரம்

**இறைவன்** : ஏகாம்பரநாதர் **இறைவி** : ஏலவார்குழலி அம்மை

**பயன் :** இடக்கண்ணில் உள்ள கோளாறு நீங்குவதற்கும், குறைந்த பார்வையை மீண்டும் பெற ஓத வேண்டிய பதிகம்

**சிறப்பு :** சுந்தரர் தமது இடது விழி ஒளி பெற்ற போது பாடிய பதிகம். இத்திருப்பதிகம், தமக்குக் கண் அளித்த இறைவரது திருவருளை வியந்து அருளிச்செய்தது.

(சுந்தரர், திருவொற்றியூரில் சங்கிலியார் பொருட்டுச் செய்த சூளுறவைப் பிழைத்துத் திருவாரூருக்குச் செல்லப் புறப்பட்டுத் திருவொற்றியூர் எல்லையைக் கடந்தபொழுது மறைந்த கண்களைத் தரவேண்டிப் பல தலங்களிலும் வணங்கிப் பாடி, திருவெண்பாக்கத்தில் ஊன்றுகோலைப் பெற்றுத் திருவாலங்காடு திருவூறல்களைத் தொழுது காஞ்சிபுரத்தை அடைந்து, காமக்கோட்டத்தில் அறம்புரக்கும் அம்மையை வணங்கித் திருவேகம்பத்தை அடைந்து, "கச்சி ஏகம்பனே, கடையானேன் பிழை பொறுத்துக் கண்ணளித் தருளாய்' என்று வேண்ட. பெருமான் அருளால், இடக்கண் ஒளி கொடுக்கப்பெற்று மகிழ்ந்து பாடியருளியது இத் திருப்பதிகம்.)

<u>**பதிக முதல் பாடல்**</u>

**ஆலந் தானுகந் தமுதுசெய் தானை ஆதி யைஅம ரர்தொழு தேத்தும்**
**சீலந் தான்பெரி தும்முடை யானைச் சிந்திப் பாரவர் சிந்தையு ளானை**
**ஏல வார்குழ லாள்உமை நங்கை என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற**
**கால காலனைக் கம்பன்எம் மானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே**

**(7.61.1)**

ஆலம் தான் உகந்து அமுது செய்தானை ஆதியை அமரர் தொழுது ஏத்தும்
சீலம் தான் பெரிதும் உடையானை சிந்திப்பார் அவர் சிந்தை உளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனை கம்பன் எம்மானை காணக் கண் அடியேன் பெற்ற வாறே

**பாடல் விளக்கம் :**

நஞ்சினைத் தான் விரும்பி உண்டு, அமுதத்தைத் தேவர்களுக்கு அளித்தவனும், யாவர்க்கும் முதல்வனும், தேவர்கள் வணங்கித் துதிக்கின்ற பெருமையை மிக உடையவனும், தன்னை நினைப்பவரது நினைவில் விளங்குபவனும், மயிர்ச்சாந்து அணிந்த நீண்ட கூந்தலையுடையவளாகிய உமை என்னும் நங்கை எந்நாளும் துதித்து வழிபடுதலைப் பெற்றமைக்கு முதல்வனும், காலகாலனும் ஆகிய திருவேகம்பத்தில் உள்ள எம் பெருமானைக் காணுதற்கு அடியேன் கண் பெற்றது வியப்பு!

**பதிக கடைசிப் பாடல்**

**பெற்றம் ஏறுகந் தேறவல் லானைப் பெரிய எம்பெரு மான்என்றெப் போதும்**
**கற்ற வர்பர வப்படு வானைக் காணக் கண்அடி யேன்பெற்ற தென்று**
**கொற்ற வன்கம்பன் கூத்தன்எம் மானைக் குளிர்பொ ழில்திரு நாவல்ஆ ரூரன்**
**நற்ற மிழிவை ஈரைந்தும் வல்லார் நன்னெ றிஉல கெய்துவர் தாமே**

**(7.61.11)**

பெற்றம் ஏறு உகந்து ஏற வல்லானை பெரிய எம்பெருமான் என்று எப்போதும்
கற்றவர் பரவப்படுவானை காணக் கண் அடியேன் பெற்றது என்று
கொற்றவன் கம்பன் கூத்தன் எம்மானை குளிர் பொழில் திருநாவல் ஆரூரன்
நற்றமிழ் இவை ஈரைந்தும் வல்லார் நன்னெறி உலகு எய்துவர் தாமே

**பாடல் விளக்கம் :**

ஆனேற்றை விரும்பி ஏற வல்லவனும், மெய்ந் நூல்களைக் கற்றவர்களால், "**இவன் எம் பெரிய பெருமான்**" என்று எப்போதும் மறவாது துதிக்கப்படுபவனும், யாவர்க்கும் தலைவனும், கூத்தாடுதலை உடையவனும் ஆகிய திருஏகம்பத்தில் உள்ள எம்பெருமானைக் காணுதற்கு அடியேன் கண் பெற்றது வியப்பாகும் என்று, குளிர்ந்த சோலைகளையுடைய திருநாவலூரின் நம்பியாரூரன் பாடிய நல்ல தமிழ்ப் பாடலாகிய இவை பத்தினையும் பாட வல்லவர் நன்னெறியால் பெறும் உலகத்தைத் திண்ணமாக அடைவர்.

## சிறப்புப் பதிகங்கள் –2

வகுப்பு–14

### திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**திருமுறை :** முதலாம் திருமுறை **பதிகம் :** 116

**பண் :** வியாழக்குறிஞ்சி **இராகம் :** சௌராஷ்டிரமம் **தாளம் :** ஆதி

**தலம் :** பொது

**பயன்:** தீவினைகள் தீர ஓத வேண்டிய பதிகம்.

**சிறப்பு :** பிறவிப்பயன் பற்றி திருஞானசம்பந்தர் பாடிய பதிகம். 'திருநீலகண்டப்பதிகம்' என்று சிறப்பாகக் கூறுவர்.

(ஞானசம்பந்தர் திருச்செங்குன்றூர் வந்து திருமடம் ஒன்றில் தங்கியிருந்தார். அக்காலம் பனிக்காலம் ஆனதால் அந்நிலத்தின் இயல்புப்படி பனி நோய் என்னும் குளிர் காய்ச்சல் அவருடன் வந்த அடியார்களைப் பற்றி வருத்தியது. அதனை அறிந்த ஞானசம்பந்தர் அடியவர்களைப் பற்றியிருந்த அந்நோய் தீருமாறு நஞ்சுண்டு அமரர்களைக் காத்த திருநீல கண்டப் பெருமானைப் போற்றி 'அவ்வினைக்கு இவ்வினை' என்னும் திருப்பதிகம் அருளிச் செய்தார். அக்கணமே அடியவர்கட்கே யன்றி கொங்கு நாடெங்கிலும் அந்நோய் வாராது நீங்கியது.)

**பதிக முதல் பாடல்**

**அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்**
**உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே**
**கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்**
**செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்** **(1.116.1)**

அவ் வினைக்கு இவ் வினை ஆம் என்று சொல்லும் அஃது அறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும் உம்தமக்கு ஊனம் அன்றே
கை வினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாம் அடியோம்
செய்வினை வந்து எமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்

**பாடல் விளக்கம் :**

நாம் முற்பிறவிகளிற் செய்த வினைகளுக்கேற்பவே, இப்பிறவியில் வினைகளைச் செய்து அவற்றால் ஆன பயன்களை நுகர்கிறோம் என்று சொல்லப் பெறுவதை நீங்கள் அறிவீர்கள். இவற்றிலிருந்து விடுதிபெறும் வழியை நீவிர் தேடாதிருப்பது உமக்குக் குறையன்றோ? நாம் அனைவரும் சிவபிரானுக்கு அடியவர்கள் ஆவோம். அவ்விறைவனை நோக்கிச் சரியை, கிரியை முதலான சிவப்பணிகளைச் செய்து அவ்விறைவன் கழலைப் போற்றுவோம். அவ்வாறு செய்யின் நாம் செய்த பழவினைகள் நம்மை வந்து அணுகா. இது திருநீலகண்டத்தின் மேல் ஆணை.

(அவ்வினைக்கு – முன்னைய வினைக்கு. இவ்வினை – இப்போது சுரநோயால் வருந்தும் இவ்வினை. உய்வினை – தீரும் உபாயத்தை. கைவினை – கிரியைகளாகிய சிவப்பணி.)

**<u>பதிக கடைசிப் பாடல்</u>**

**பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன் கழலடைவான்**
**இறந்த பிறவியுண் டாகி லிமையவர் கோனடிக்கண்**
**திறம்பயின் ஞானசம் பந்தன செந்தமிழ் பத்தும்வல்லார்**
**நிறைந்த வுலகினில் வானவர் கோனொடுங் கூடுவரே (1.116.11)**

பிறந்த பிறவியில் பேணி எம் செல்வன் கழல் அடைவான்
இறந்த பிறவி உண்டாகில் இமையவர்கோன் அடிக்கண்
திறம் பயில் ஞானசம்பந்தன செந்தமிழ் பத்தும் வல்லார்
நிறைந்த உலகினில் வானவர்கோனொடும் கூடுவரே

**<u>பாடல் விளக்கம் :</u>**

மக்கட் பிறப்பெடுத்த இப்பிறவியிலேயே சிவபிரான் திருவடிகளை விரும்பி வழிபடின் முத்திப்பேறு அடையலாம். மீண்டும் பழவினைகளால் பிறப்பு உளதாயின், தேவர்களின் தலைவனாகிய சிவபிரான் திருவடிகளின் பெருமைகளை அறிந்த ஞானசம்பந்தன் அருளிய இத்திருப்பதிகச் செந்தமிழ்ப் பாடல்கள் பத்தையும் ஓத வல்லவர்களாயின், அவர்கள் இமையவர்கள் நிறைந்த வானுலகில் அவ்வானவர் கோனொடும் கூடி மகிழும் பதவியைப் பெற்று இன்புறுவர்.

வகுப்பு–15

## திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்

**திருமுறை :** நான்காம் திருமுறை **பதிகம் :** 94

**பாடல் அமைப்பு :** திருவிருத்தம் **இராகம் :** கல்யாணி **தாளம்:** ஆதி

**தலம் :** திருப்பாதிரிப்புலியூர்

**இறைவன் :** தோன்றாத்துணைநாதர், பாடலேசுவரர்

**இறைவி:** தோகைநாயகி, பெரியநாயகி

**பயன் :** பிறவா வரம் வேண்டி ஓத வேண்டிய பதிகம்.

**சிறப்பு:** அப்பரை கல்லோடு கட்டிக் கடலில் வீசிய போது திருவைந்தெழுத்தின் பெருமையால் கல் தெப்பமாக மிதந்து திருப்பாதிரிப்புலியூர் என்னும் தலத்தின் அருகில் கொண்டுச் சேர்த்தது. அப்போது நாவுக்கரசர் திருப்பாதிரிப்புலியூர் பெருமானைப் போற்றிப் பரவினார். இப்பதிகத்தில் அடியாருக்கும் இறைவனுக்கும் உள்ள உறவு முறையின் சிறப்பும், திருவைந்தெழுத்தின் பெருமையும் கூறப்படுகிறது.

### பதிக முதல் பாடல்

**ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் றோன்றினராய்**
**மூன்றா யுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க**
**ஏன்றா னிமையவர்க் கன்பன் றிருப்பா திரிப்புலியூர்த்**
**தோன்றாத் துணையா யிருந்தனன் றன்னடி யோங்களுக்கே (4.94.1)**

ஈன்றாளும் ஆய் எனக்கு எந்தையும் ஆய் உடன் தோன்றினராய்
மூன்று ஆய் உலகம் படைத்து உகந்தான் மனத்துள் இருக்க
ஏன்றான் இமையவர்க்கு அன்பன்; திருப் பாதிரிப்புலியூர்த்
தோன்றாத் துணை ஆய் இருந்தனன் தன் அடியோங்களுக்கே

### பாடல் விளக்கம் :

அடியேனுக்குத் தாயாய் தந்தையாய் உடன் பிறந்தவராய் அமைந்து, மூன்று உலகங்களையும் படைத்து மகிழ்ந்தவனாய், அடியேன் மனத்துள் இருக்க இசைந்தவனாய்த் தேவர்களுக்கும் அன்பனாகிய சிவபெருமான், திருப்பாதிரிப்புலியூரில் தன் அடியவர்களுக்குத் தோன்றாத் துணைவனாய் இருந்து அருள் புரிகிறான்.

### ஆறாவது பாடல்

**கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்**
**உருவாய்த் தெரிந்துன்ற னாமம் பயின்றே னுனதருளால்**
**திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்**
**தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூரரனே (4.94.6)**

கருஆய்க் கிடந்து உன் கழலே நினையும் கருத்து உடையேன்
உருஆய்த் தெரிந்து உன்தன் நாமம் பயின்றேன் உனது அருளால்
திருவாய் பொலியச் சிவாயநம என்று நீறு அணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப்புலியூர் அரனே

**பாடல் விளக்கம் :**

திருப்பாதிரிப்புலியூர்ப் பெருமானே ! தாயின் கருவிலே கிடந்த போது உன் திருவடிகளையே தியானிக்கும் கருத்து உடையேனாய் இருந்தேன். இம்மண்ணுலகில் பிறந்து உன் அருளினால் இப்பொழுது ஆராய்ந்து உன் திருநாமங்களைப் பலகாலும் சொல்லப் பழகியுள்ளேன். உனது திருவருளால் வாயின் செம்மை பொலியச் 'சிவாய நம' என திருவைந்தெழுத்தை ஓதித் திருநீறு அணியப் பெற்றேன். ஆதலின் அடியேனுக்கு நற்கதி தருவாயாக.

**எட்டாம் பாடல்**

**புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே**
**வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே**
**தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்**
**செழுநீர்ப்புனற்கங்கை செஞ்சடைமேல்வைத்த தீவண்ணனே (4.94.8)**

புழுஆய்ப் பிறக்கினும் புண்ணியா உன் அடி என் மனத்தே
வழுவாது இருக்க வரம் தரவேண்டும் இவ் வையகத்தே
தொழுவார்க்கு இரங்கி இருந்து அருள் செய் பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனல் கங்கை செஞ்சடைமேல் வைத்த தீவண்ணனே

**பாடல் விளக்கம் :**

இவ்வுலகிலே அடியவர்களுக்கு இரக்கப்பட்டு அருள் செய்கின்ற, திருப்பாதிரிப் புலியூரில் உறையும், செழுமையான கங்கைநீரைச் செஞ்சடையில் தேக்கி வைத்திருக்கும் தீப்போன்ற செந்நிறத்துப் பெருமானே! அடியேன் மறுபிறவியில் புழுவாகப் பிறந்தாலும் புண்ணியமே வடிவெடுத்த உன் திருவடிகள் அடியேன் மனத்தை விட்டு நீங்காதிருக்குமாறு அடியேனுக்கு அருள் செய்ய வேண்டும்.

## பதிக கடைசிப் பாடல்

திருந்தா வமணர் தந் தீநெறிப் பட்டுத் திகைத்துமுத்தி
தருந்தா ளிணைக்கே சரணம் புகுந்தேன் வரையெடுத்த
பொருந்தா வரக்க னுடனெரித் தாய்பா திரிப்புலியூர்
இருந்தா யடியே னினிப்பிற வாமல்வந் தேன்றுகொள்ளே (4.94.10)

திருந்தா அமணர்தம் தீ நெறிப் பட்டு திகைத்து முத்தி
தரும் தாள் இணைக்கே சரணம் புகுந்தேன் வரை எடுத்த
பொருந்தா அரக்கன் உடல் நெரித்தாய் பாதிரிப்புலியூர்
இருந்தாய் அடியேன் இனிப் பிறவாமல் வந்து ஏன்றுகொள்ளே

## பாடல் விளக்கம் :

மலையைப் பெயர்க்க முற்பட்ட, நல்லறிவு பொருந்தாத இராவணனுடைய உடலை நெரித்தவனே! திருப்பாதிரிப்புலியூரில் உறைபவனே! மனம் திருந்துதல் இல்லாத சமணருடைய தீயவழியிலே ஈடுபட்டு மனம் மயங்கி, இப்பொழுது முத்தியைத் தரும் திருவடிகளில் சரணமாகப் புகுந்து விட்டேன். இனி, அடியேன் பிறவி எடுக்காத வகையில் அடியேனை ஏற்றுக் கொள்வாயாக.

வகுப்பு–16

## சுந்தரர் அருளிய தேவாரம்

**திருமுறை :** ஏழாம் திருமுறை **பதிகம் :** 48

**பண் :** பழம்பஞ்சுரம் **இராகம் :** சங்கராபரணம் **தாளம் :**

**தலம்:** திருப்பாண்டிக்கொடுமுடி

**இறைவன்:** கொடுமுடிநாதர் **இறைவி :** பண்மொழிநாயகி

**பயன்:** பிறவித் துன்பம் நீங்க ஓத வேண்டிய பதிகம்.

**சிறப்பு:** **'நமச்சிவாயத் திருப்பதிகம்'** – இத்திருப்பதிகம், கொடுமுடிக் கோயிலில் உள்ள பெருமானது அழகிய திருமேனியைக் கண்டு வணங்கியபொழுது எழுந்த பேரன்பால், **'இவரை, யாண்மறவேன்'** என்னும் கருத்தால் அருளிச் செய்தது. ஒவ்வொருபாடலின் இறுதியிலும் **"சொல்லுநா நமச்சிவாயவே"** என்று அருளியிருப்பதால், இதற்கு, 'நமச்சிவாயத் திருப்பதிகம்' என்ற பெயர் வழங்கப்படுகிறது.

### பதிக முதல் பாடல்

**மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப் பாத மேமனம் பாவித்தேன்**
**பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற வாத தன்மைவந் தெய்தினேன்**
**கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி**
**நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும்நா நமச்சி வாயவே** (7.76.1)

மற்றுப் பற்று எனக்கு இன்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மை வந்து எய்தினேன்
கற்றவர் தொழுது ஏத்தும் சீர்க் கறையூரில் பாண்டிக்கொடுமுடி
நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே

### பாடல் விளக்கம் :

கற்றவர்கள் வணங்கித் துதிக்கின்ற புகழையுடைய கறையூரில் உள்ள, "திருப்பாண்டிக் கொடுமுடி" என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற, நல்ல தவவடிவினனே, எனக்கு வேறு பற்று எதுவும் இல்லாது, உனது திருவடியையே பற்றாக என் மனத்தில் துணியப் பெற்றேன். அவ்வாறு துணியப்பெற்ற பின்பே, நான் மனிதனாய்ப் பிறந்தவனாயினேன்; அதுவன்றி, இனியொரு பிறப்பிற் சென்று பிறவாத தன்மையும் என்னை வந்து அடையப் பெற்றேன்; இனி உன்னை நான் மறந்தாலும், என் நா, உனது திருப்பெயராகிய, "நமச்சிவாய" என்பதனை, இடையறாது சொல்லும். ('கறையூர்' என்பது தலத்தின் பெயர், 'பாண்டிக் கொடுமுடி' என்பது கோயிலின் பெயர்.)

**பதிக கடைசிப் பாடல்**

**கோணி யபிறை சூடி யைக்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி**
**பேணி யபெரு மானைப் பிஞ்ஞகப் பித்த னைப்பிறப் பில்லியைப்**
**பாணு லாவரி வண்ட றைகொன்றைத் தார னைப்படப் பாம்பரை**
**நாண னைத்தொண்டன் ஊரன் சொல்லிவை சொல்லு வார்க்கில்லை துன்பமே**
**(7.76.10)**

கோணிய பிறை சூடியைக் கறையூரிற் பாண்டிக்கொடுமுடி
பேணிய பெருமானைப் பிஞ்ஞகப்பித்தனைப் பிறப்பில்லியைப்
பாண் உலா வரிவண்டு அறை கொன்றைத்தாரனைப் படப்பாம்பு அரை
நாணனைத் தொண்டன்ஊரன் சொல் இவை சொல்லுவார்க்கு இல்லை துன்பமே

**பாடல் விளக்கம் :**

வளைந்த பிறையைச் சூடினவனும், தலைக் கோலம் உடையவனும். பேரருள் உடையவனும், பிறப்பில்லாதவனும், இசையோடு உலாவுகின்ற வரிகளையுடைய வண்டுகள் ஒலிக்கும் கொன்றைப் பூமாலையை அணிந்தவனும், படத்தையுடைய பாம்பாகிய அரைநாணை உடையவனும் ஆகிய கறையூரில் உள்ள, 'திருப்பாண்டிக்கொடுமுடி' என்னும் கோயிலை விரும்பி எழுந்தருளி இருக்கின்ற பெருமானை, அவன் தொண்டனாகிய நம்பியாரூரன் பாடிய இப்பாடல்களைப் பாடுபவர்க்குத் துன்பம் இல்லையாம்.

**வகுப்பு– 17**

**மீள் பயிற்சி**

# திருவாசகம்

வகுப்பு–18

## மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்

**திருமுறை :** எட்டாம் திருமுறை **பதிகம் :** 37 (**பிடித்த பத்து**)

**இராகம் :** மோகனம் தாளம் : ஆதி

**தலம் :** சீர்காழி (திருத்தோணிபுரம்)

**இறைவன்:** பிரம்மபுரீசுவரர், திருத்தோணியப்பர் **இறைவி :** திருநிலைநாயகி

**பயன்:** இறைவன் அருளைப் பெற வழிக்காட்டுவது.

**சிறப்பு :** 'உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்' என்று இறைவனைத் தாம் விடாது பிடித்த செயலைக் கூறும் பத்துப் பாடல்கள் என்பதால் இது 'பிடித்தப் பத்து' எனப்பட்டது. இந்தப் பதிகம் முத்தியில் கலந்த அனுபவத்தைக் கூறுகிறது.

**அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்தஆ ரமுதே**
**பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேன்**
**றனக்குச்**
**செம்மையே ஆய சிவபதம் அளித்த செல்வமே சிவபெரு மானே**
**இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே**
**(8.37.3)**

அம்மையே அப்பா ஒப்பு இலா மணியே அன்பினில் விளைந்த ஆர் அமுதே
பொய்ம்மையே பெருக்கி பொழுதினைச் சுருக்கும் புழுத் தலைப் புலையனேன்
தனக்கு
செம்மையே ஆய சிவபதம் அளித்த செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கு எழுந்தருளுவது இனியே

**பாடல் விளக்கம் :**

அம்மையே –அப்பா, நிகரில்லாத மாணிக்கமே! அன்பாகிய கடலில் உண்டாகிய, அருமையான அமுதமே! பொய்ம்மையான செயல்களையே அதிகமாகச் செய்து காலத்தை வீணாகக் கழிக்கின்ற, புழுக்களை உடைய உடம்பில் உள்ள கீழ்மையேனுக்கு, மிக மேன்மையான, சிவபதத்தைக் கொடுத்தருளின, அருட்செல்வமே! சிவபெருமானே! இவ்வுலகிலேயே உன்னை உறுதியாகப் பற்றினேன், நீ இனிமேல் எங்கே எழுந்தருளிச் செல்வது?

## ஒன்பதாவது பாடல்

**பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப் பரிந்துநீ பாவியே னுடைய**
**ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்த மாய**
**தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த செல்வமே சிவபெரு மானே**
**யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே**

**(8.37.9)**

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கி உலப்பு இலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கு எழுந்தருளுவது இனியே

## பாடல் விளக்கம் :

பாலை, காலமறிந்து கொடுக்கின்ற தாயைக்காட்டிலும் மிகவும் அன்பு கொண்டு நீ பாவியாகிய என்னுடைய உடம்பை உருக்கி உள்ளத்தில் ஞானத்தைப் பெருக்கி அழியாத இன்பமாகிய தேனைப் பொழிந்து நான்கு புறங்களிலும் உடன் திரிந்த அருட்செல்வமே சிவபிரானே ! நான் உன்னைத் தொடர்ந்து, உறுதியாகப் பற்றினேன், நீ இனிமேல் எங்கே எழுந்தருளிச் செல்வது?

வகுப்பு–19

## மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்

**திருமுறை :** எட்டாம் திருமுறை **பதிகம் :** 33 (**குழைத்த பத்து** )

**பண் :** **இராகம் :** சஹானா **தாளம் :** ஆதி

**தலம் :** திருப்பெருந்துறை

**இறைவன்:** அத்மநாதசுவாமி, ஆவுடையப்பர் **இறைவி :** யோகாம்பாள்

**சிறப்பு :** திருவருள் துணையே திறம்பெறச் செய்யும் என்னும் உண்மை உரைப்பது.

**ஆறாவது பாடல்**

**வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ**
**வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டி என்னைப் பணிகொண்டாய்**
**வேண்டி நீயா தருள்செய்தாய் யானும் அதுவே வேண்டின்அல்லால்**
**வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே (8.33.6)**

வேண்டத் தக்கது அறிவோய் நீ வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற்கு அரியோய் நீ வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய் யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில் அதுவும் உன் தன் விருப்பு அன்றே

**பாடல் விளக்கம் :**

உயிர்களுக்குத் தேவையானது இது என்று அறிவோன் நீயே! அவ்வுயிர்கள் எவற்றை வேண்டினாலும், அவற்றை எல்லாம் அருளுபவனும் நீயே! உன்னைக் காண விரும்பிய பிரமன், திருமால் என்பவருக்குக் காண்பதற்கு அரியவனாய் நின்ற நீ, நீயாகவே விரும்பி, என்னை ஆளாகக் கொண்டாய்! என் பொருட்டு நீ விரும்பி எதனை அருள் செய்தனையோ அதனையே யானும் விரும்புவது அல்லது நானாக விரும்புகிற பொருள் ஒன்று உண்டு என்னில் அந்தப் பொருளும் உன்னிடத்தில் நான் வைக்கிற அன்பே அன்றோ?

**பதிக கடைசிப் பாடல்**

**அழகே புரிந்திட் டடிநாயேன் அரற்று கின்றேன் உடையானே**
**திகழா நின்ற திருமேனி காட்டி என்னைப் பணிகொண்டாய்**
**புகழே பெரிய பதம்எனக்குப் புராண நீதந் தருளாதே**
**குழகா கோல மறையோனே கோனே என்னைக் குழைத்தாயே (8.33.10)**

அழகே புரிந்திட்டு அடி நாயேன் அரற்றுகின்றேன் உடையானே
திகழா நின்ற திருமேனி காட்டி என்னைப் பணிகொண்டாய்
புகழே பெரிய பதம் எனக்கு புராண நீ தந்தருளாதே
குழகா கோல மறையோனே கோனே என்னைக் குழைத்தாயே

**பாடல் விளக்கம் :**

பழமையானவனே! அழகனே! வேதியனே! இறைவனே! உன்னுடைய அழகையே காண விரும்பினேன். அதற்காகவே நாய் போன்ற அடிமையாகிய நான் அழுது அரற்றுகிறேன். ஒளி விளங்குகிற உன்னுடைய திருமேனியைக் காட்டி, என்னை உன் அடியனாக ஏற்றுக் கொண்டாய். புகழை மிக உடைய உன் திருவடிப் பேற்றினை எனக்கு நீ கொடுத்தருளாமல் என்னை வாடச் செய்தாயே! இது முறையோ?

வகுப்பு–20

## மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்

**திருமுறை :** எட்டாம் திருமுறை **பதிகம் :** 20 (திருப்பள்ளியெழுச்சி )

**இராகம் :** **தாளம் :**

**தலம் :** திருப்பெருந்துறை

**இறைவன்:** ஆத்மநாதசுவாமி, ஆவுடையப்பர் **இறைவி :** யோகாம்பாள்

**பயன்:** இறைவன் அருளைப் பெற வழிக்காட்டுவது.

**சிறப்பு:** இறைவனை துயில் எழுப்புவதாக அமைத்து, நமக்குள் இருக்கும் ஆன்மாவைத் துயிலெழுப்பி இறைவனின் பெருங்கருணையை உணரச் செய்வது போல் பாடப்பட்ட பாடல்.

**போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே**
**புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்**
**டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்**
**எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்**
**சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்**
**திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே**
**ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்**
**எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே** (8.20.1)

போற்றி என் வாழ் முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூம் கழற்கு இணை துணைமலர் கொண்டு
ஏற்றி நின் திருமுகத்து எமக்கு அருள் மலரும்
எழில் நகை கண்டு நின் திருவடிதொழுகோம்
சேற்று இதழ்க் கமலங்கள் மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறைசிவபெருமானே
ஏற்று உயர் கொடி உடையாய் எமை உடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே

**பாடல் விளக்கம் :**

என் வாழ்வுக்கு மூலக் காரணமான பொருளே! சேற்றில் இதழ்களையுடைய தாமரை மலர்கள் மலர்கின்ற குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த, திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற சிவபிரானே! உயர்ந்த இடபக் கொடியை உடையவனே! என்னை அடிமையாக உடையவனே! எம் தலைவனே! வணக்கம். பொழுது விடிந்தது; தாமரை போன்ற திருவடிகளுக்கு ஒப்பாக இரண்டு மலர்களைக் கொண்டு சாத்தி அதன் பயனாக உன்னுடைய திருமுகத்தில் எமக்காக அருளோடு மலர்கின்ற அழகிய புன்சிரிப்பைக் கண்டு உன் திருவடியைத் தொழுவோம்; பெருமானே, பள்ளி எழுந்தருள்வாயாக!

**<u>பதிக கடைசிப் பாடல்</u>**

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே (8.20.10)

புவனியில் போய்ப் பிறவாமையின் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு என்று நோக்கித்
திருப்பெருந்துறை உறைவாய் திருமால்ஆம்
அவன் விருப்பு எய்தவும் அலரவன் ஆசைப்
படவும் நின் அலர்ந்த மெய்க்கருணையும் நீயும்
அவனியில் புகுந்து எமை ஆட்கொள்ள வல்லாய்
ஆர் அமுதே பள்ளி எழுந்தருளாயே

**<u>பாடல் விளக்கம் :</u>**

திருப்பெருந்துறையில் வீற்றிருப்பவனே! 'திருமால் பூமியில் சென்று பிறவாமையால், நாம் வீணாகவே நாள் போக்குகின்றோம் என்றும், இந்தப் பூமி சிவபெருமான் நாம் உய்யும்படி அடிமை கொள்கின்ற இடம்' என்றும் பார்த்து விருப்பம் அடைந்தான். மலரில் உறைகின்ற பிரமன் ஆசைப்பட்டு அர்ச்சிக்கவும், நீயும், உனது பரந்த உண்மையான உன் திருவருட்சத்தியும் பூமியில் எழுந்தருளி வந்து எம்மை ஆட்கொள்ள வல்லவனே! அருமையான அமுதம் போன்றவனே! திருப்பள்ளியினின்றும் எழுந்தருள்வாயாக!

(இப்பாடலில் இறைவன் ஆட்கொள்ளும் இடம் இப்பூமி என்பது பெறப்படும்.)

வகுப்பு–21

## மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்

**திருமுறை :** எட்டாம் திருமுறை **பதிகம் :** 16 (**திருபொன்னூசல்)**

**இராகம் :** **தாளம் :**

**தலம் :** திருத்தில்லை

**இறைவன்:** சபாநாயகர் **இறைவி :** சிவகாமியம்மை

**சிறப்பு:** அருள் சுத்தி – ஆன்மா தன் முனைப்பு இழந்து அருளோடு கூடுவது அருள் சுத்தி

**சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக**
**ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து**
**நாரா யணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்கு**
**ஊராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை**
**ஆரா அமுதின் அருட்டா ளிணைபாடிப்**
**போரார்வேற் கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ** **(8.16.1)**

சீர் ஆர் பவளம் கால் முத்தம் கயிறு ஆக
ஏர் ஆரும் பொன் பலகை ஏறி இனிது அமர்ந்து
நாராயணன் அறியா நாள் மலர்த் தாள் நாய் அடியேற்கு
ஊர் ஆகத் தந்தருளும் உத்தரகோசமங்கை
ஆரா அமுதின் அருள் தாள் இணை பாடி
போர் ஆர் வேல் கண் மடவீர் பொன் ஊசல் ஆடாமோ

**பாடல் விளக்கம் :**

போரில் பயன்படும் கூரிய வேலை ஒத்த கண்களையுடைய பெண்களே! மேன்மை பொருந்திய பவளம் கால்களாகவும், முத்து வடம் கயிறு ஆகவும் உடைய, அழகு பொருந்திய பொன்னாலாகிய ஊஞ்சல் பலகையில் ஏறி, பெருமான் இனிமையாய் இருந்து, திருமால் அறியாத, அன்றலர்ந்த தாமரை போலும் தனது திருவடியை நாய் போன்ற அடியேனுக்கு உறைவிடமாக தந்தருளியவன். திருஉத்தரகோசமங்கையில் எழுந்தருளியிருப்பவன். தெவிட்டாத அமுதம் போன்றவன். அவனது அருளாகிய இரண்டு திருவடியைப் புகழ்ந்து பாடி நாம் பொன்னாலாகிய ஊஞ்சலில் இருந்து ஆடுவோமாக!

**தெங்குலவு சோலைத் திருஉத்தர கோசமங்கை**
**தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி**
**எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொள்வான்**
**பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட**
**கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்**
**பொங்குலவு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ** (8.16.9)

தெங்கு உலவு சோலைத் திரு உத்தரகோசமங்கை
தங்கு உலவு சோதித் தனி உருவம் வந்தருளி
எங்கள் பிறப்பு அறுத்திட்டு எம் தரமும் ஆட்கொள்வான்
பங்கு உலவு கோதையும் தானும் பணி கொண்ட
கொங்கு உலவு கொன்றைச் சடையான் குணம் பரவி
பொங்கு உலவு பூண் முலையீர் பொன் ஊசல் ஆடாமோ

**பாடல் விளக்கம் :**

விளக்கம் பொருந்திய, ஆபரணங்களை அணிந்த முலைகளையுடைய பெண்களே! தென்னை மரங்கள் பரவியுள்ள சோலையையுடைய திருஉத்தரகோசமங்கையில் நிலை பெற்றுள்ள ஒப்பற்ற ஒளி வடிவானவன். அவன் அந்த திரு உருவோடு எழுந்தருளி வந்து எங்கள் பிறவியைத் தொலைத்தான். எம்மைப் போன்றவரையும் அடிமை கொள்ளும் பொருட்டு, தனது ஒரு பாகமாக உறையும் மங்கையும் தானுமாய்த் தோன்றி, குற்றேவல் கொண்டருளியவன். மணம் வீசும் கொன்றை மாலை அணிந்த சடையை உடையவன். அவனுடைய மேன்மையான குணத்தைப் புகழ்ந்து, பொன்னாலாகிய ஊஞ்சலில் இருந்து ஆடுவோமாக!

வகுப்பு–22

**திருமுறை :** எட்டாம் திருமுறை

**பதிகம் :** 29 **அருள் பத்து**

**இராகம் :** ஆரபி

**தாளம் :** ஆதி

**தலம் :** திருப்பெருந்துறை

**இறைவன்:** அத்மநாதசுவாமி, ஆவுடையப்பர் **இறைவி :** யோகாம்பாள்

**சிறப்பு:** இறைவனை அன்பால் அழைத்து அருள் பெறும் தன்மை உரைப்பது.

**சோதியே சுடரே சூழொளி விளக்கே சுரிகுழற் பணைமுலை மடந்தை**
**பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய் பங்கயத் தயனுமா லறியா**
**நீதியே செல்வத் திருப்பெருந் துறையில் நிறைமலர்க் குருந்தமே வியசீர்**
**ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால் அதெந்துவே என்றரு ளாயே (8.29.1)**

சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே சுரி குழல் பணை முலை மடந்தை
பாதியே பரனே பால் கொள் வெள் நீற்றாய் பங்கயத்து அயனும் மால் அறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில் நிறை மலர்க் குருந்தம் மேவிய சீர்
ஆதியே அடியேன் ஆதரித்து அழைத்தால் அதெந்துவே என்று அருளாயே

**பாடல் விளக்கம் :**

சோதிப் பிழம்பானவனே! ஒளிப்பிழம்பில் உள்ள கதிர்களாய் உள்ளவனே! சூழ்ந்திருக்கும் ஒளியையுடைய விளக்குப் போன்றவனே! சுருண்ட கூந்தலையும், பருத்த தனங்களையும் உடைய உமாதேவியின் பாகத்தை உடையவனே! மேலானவனே! பால் நிறம் போன்ற திருவெண்ணீற்றை அணிந்தவனே! தாமரை மலரை இடமாக உடைய பிரமனும், திருமாலும் அறிய முடியாத நீதியானவனே! செல்வம் மிக்க திருப்பெருந்துறையில் நிறைந்த மலர்களையுடைய குருந்த மரநிழலில் பொருந்திய சிறப்புடைய முதல்வனே! அடியேனாகிய நான், உன்னை விரும்பி அழைத்தால் 'அதென்ன' என்று சொல்லி அருள் புரிவாயாக.

**திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையில் செழுமலர்க் குருந்தமே வியசீர்**
**இருந்தவா றெண்ணி ஏசறா நினைந்திட்டு என்னுடை யெம்பிரான் என்றென்**
**றருந்தவா நினைந்தே ஆதரித் தழைத்தால் அலைகடல் அதனுளே நின்று**
**பொருந்தவா கயிலை புகுநெறி இதுகாண் போதராய் என்றரு ளாயே (8.29.10)**

திருந்து வார் பொழில் சூழ் திருப்பெருந்துறையில் செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
இருந்தவாறு எண்ணி ஏசறா நினைந்திட்டு என்னுடை எம்பிரான் என்று என்று
அருந்தவா நினைந்தே ஆதரித்து அழைத்தால் அலை கடல் அதனுளே நின்று
பொருந்த வா கயிலை புகு நெறி இது காண் போதராய் என்று அருளாயே

**பாடல் விளக்கம் :**

அரிய தவக்கோலத்தை உடையவனே! திருந்திய நீண்ட சோலை சூழ்ந்த திருப்பெருந்துறையில், செழுமையான மலர்களையுடைய குருந்த மர நிழலில் குருவாய் வீற்றிருந்த முறையை நினைந்து, அது காணப் பெறாமையால் வருந்தி "என்னுடைய எம் பெருமான்," என்று பலகாலும் நினைந்து அன்போடு அழைத்தால் அலை கடல் நடுவில் உள்ள உலகத்தினின்றும், "என்னை அடைய வருவாயாக! எனது கயிலாயத்தைச் சேரும் வழி இதுதான்! அவ்வழியே வருவாயாக," என்று சொல்லி அருள் புரிவாயாக!

வகுப்பு–23

**திருமுறை :** எட்டாம் திருமுறை

**பதிகம் :** 07 **திருஎம்பாவை**

**இராகம் :** **தாளம் :**

**தலம் :** திருவண்ணாமலை

**இறைவன்:** அருணாச்சலேசுவரர்

**இறைவி :** உண்ணாமுலையம்மை

**சிறப்பு :** எம்பாவாய் என்று ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் முடிகின்றமையால், இப்பகுதி திருஎம்பாவை (திருவெம்பாவை) என்னும் பெயருடையதாயிற்று. திரு என்பது அடைமொழி. மார்கழி மாதத்தில் சில பெண்கள் தம்முள் கூடிப் பிற பெண்களின் இல்லந்தோறும் சென்று, அவர்களையும் எழுப்பிக்கொண்டு குளத்துக்கு நீராடச் செல்லும் போது இறைவன் புகழைப் பாடிக் கொண்டே செல்வர். பக்குவம் பெற்ற ஆன்மா, பக்குவம் பெறாத ஆன்மாவை எழுப்பி, இறைவனது அருள் நீரில் திளைப்பதற்கு அழைத்துச் செல்வதாகத் தத்துவப் பொருள் கொள்வர்.

**ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்**
**சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்**
**மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்**
**மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்**
**வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து**
**போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்**
**ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே**
**ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்** **(8.7.1)**

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும்
சோதியை யாம் பாடக் கேட்டேயும் வாள் தடம் கண்
மாதே வளருதியோ வன் செவியோ நின் செவி தான்
மா தேவன் வார் கழல்கள் வாழ்த்திய வாழ்த்து ஒலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போது ஆர் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எம் தோழி பரிசு ஏல் ஓர் எம்பாவாய்

**பாடல் விளக்கம் :**

ஒளி பொருந்திய நீண்ட கண்களை உடைய பெண்ணே! முதலும் முடிவும் இல்லாத அரும் பெருஞ்சோதிப் பிழம்பானவன் இறைவன். அவ்விறைவனை நாங்கள் பாடுவதைக் கேட்டும், இன்னும் உறங்குகின்றனையோ? உன் காது ஓசை புகாத வலிய காதோ? மகாதேவனுடைய நெடிய சிலம்பணிந்த திருவடிகளை நாங்கள் புகழ்ந்து பாடிய வாழ்த்துப் பாடல்களின் ஒலி சென்று, தெருவின் கண் கேட்ட அளவிலேயே, எங்கள் தோழி ஒருத்தி பொருமி அழுது, உடம்பை மறந்து மலர் நிறைந்த படுக்கையின் மீதிருந்து புரண்டு விழுந்தாள். இந் நிலத்தே, ஒன்றுக்கும் ஆகாதவள் போல மூர்ச்சித்துக் கிடந்தாள். இஃது அவள் தன்மை. அவள் இவ்வாறு இருக்க உன் தன்மை என்னே வியப்புடையது?

**முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே**
**பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே**
**உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்**
**உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்**
**அன்னவரே எம்கணவ ராவார் அவர்உகந்து**
**சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்**
**இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்**
**என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய்** **(8.7.9)**

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீர் அடியோம்
உன் அடியார் தாள் பணிவோம் ஆங்கு அவர்க்கே பாங்கு ஆவோம்
அன்னவரே எம் கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்ன வகையே எமக்கு எம் கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏல் ஓர் எம்பாவாய்

**பாடல் விளக்கம் :**

முற்பட்டனவாகிய பழமையானபொருள்களுக்கும் முற்பட்ட பழமையான பொருளே! பிற்பட்டனவாகிய புதிய பொருள்களுக்கும் புதிய பொருளாகி நின்ற அத்தன்மையனே! உன்னை ஆண்டவனாகப் பெற்ற, உன் சிறப்பு மிக்க அடிமைகளாகிய நாங்கள் உன் தொண்டர்களின் திருவடிகளை வணங்குவோம்; அவர்களுக்கு உரிமை உடையவர்கள் ஆவோம்; அவர்களே எங்கள் கணவர் ஆவார்கள். அவர்கள் விரும்பிக் கட்டளையிட்ட வண்ணமே, அவர்கட்கு அடிமையாய் நின்று ஏவல் செய்வோம்; எங்கள் பெருமானே! எங்களுக்கு இம்முறையே கிடைக்குமாறு அருள் புரிவாயாயின் எவ்வகையான குறைபாடும் இல்லாதவர்களாய் இருப்போம்.

**போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்**
**போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்**
**போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்**
**போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்**
**போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்**
**போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்**
**போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்**
**போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்** **(8.7.20)**

போற்றி அருளுக நின் ஆதி ஆம் பாத மலர்
போற்றி அருளுக நின் அந்தம் ஆம் செம் தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றம் ஆம் பொன் பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகம் ஆம் பூம் கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறு ஆம் இணை அடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன் மலர்கள்
போற்றி யாம் மார்கழி நீர் ஆடு ஏல் ஓர் எம்பாவாய்

**பாடல் விளக்கம் :**

எப்பொருளுக்கும் முதலாயுள்ள உன் திருவடி மலருக்கு வணக்கம். எவற்றுக்கும் முடிவாயுள்ள, செந்தளிர் போலும் உன் திருவடிகளுக்கு வணக்கம். எல்லா உயிர்களும் தோன்றுதற்குக் காரணமாகிய பொன் போன்ற திருவடிகளுக்கு வணக்கம். எல்லா உயிர் களுக்கும் நிலைபெறப் பாதுகாப்பாகிய அழகிய கழலணிந்த திருவடிகளுக்கு வணக்கம். எல்லா உயிர்களும் முடிவு எய்துதற்குக் காரணமாகிய திருவடிகள் இரண்டிற்கும் வணக்கம். திருமாலும், பிரமனும், காணமுடியாத திருவடித் தாமரை மலருக்கு வணக்கம். நாம் உய்யும்படி ஆட்கொண்டு அருளுகின்ற பொற்றாமரை மலர்போலும் திருவடிகளுக்கு வணக்கம். என்று இவ்வாறெல்லாம் இறைவனை வணங்கி, நாம் மூழ்குவதற்குரிய மார்கழி நீரில் ஆடுவோமாக!

## நால்வர் முத்திப் பதிகங்கள்

வகுப்பு–24

### திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**திருமுறை :** மூன்றாம் திருமுறை **பதிகம் :** 49

**பண் :** கௌசிகம் **இராகம் :** பைரவி **தாளம் :** ஆதி

**தலம் :** பொது

**பயன் :** மெய்ப்பொருளாம் இறைவனின் அருளைப் பெற ஓத வேண்டிய பதிகம்.

**சிறப்பு :** உயிர்க்கு உறுதி பயக்கும் பஞ்சாக்கரப் பதிகம் இது. திருநல்லூர் பெருமணம் என்னும் ஆசாள்புரத்தில் திருஞானசம்பந்தர் திருமண அரங்கில் வீற்றிருந்தார். நல்லூர் பெருமணத்தில் பெரும் சோதி ஒன்று தோன்றியது. சம்பந்தர் காதலாகி கசிந்து என்ற பதிகத்தை அருளி, உடன் இருந்தவர்க்கு வீடு காட்டி தாமும் தம் மனையாளின் கரம் பற்றி அப்பெருஞ்சோதியில் புக்கு ஒன்றி உடனானார். ஒளிப் பிழம்பாகத் தோன்றிய இறைவர் திருமுன்பு பாடியருளிய நமச்சிவாய திருப்பதிகம். திருஞானசம்பந்தர் முக்தி பெறும் முன்னர் பாடிய திருப்பதிகம்.

**<u>பதிக முதல் பாடல்</u>**

**காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி**
**ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது**
**வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது**
**நாதன் நாமம் நமச்சி வாயவே** **(3.49.1)**

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

**<u>பாடல் விளக்கம் :</u>**

உள்ளன்பு கொண்டு மனம் கசிந்து கண்ணீர் பெருகி, தன் மேல் பக்தி செலுத்துபவர்களை முக்தி நெறியாகிய நன்னெறிக்குக் கொண்டு சேர்ப்பதும், நான்கு வேதங்களின் உண்மைப் பொருளாக விளங்குவதும், அனைவருக்கும் தலைவனான சிவபெருமானின் திருநாமம் "நமச்சிவாய" என்ற மூல மந்திரமே ஆகும்.

**<u>பதிக கடைசிப் பாடல்</u>**

**நந்தி நாமம் நமச்சிவா யவெனும்**
**சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்**
**சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்**
**பந்த பாசம் அறுக்கவல் லார்களே** **(3.49.11)**

நந்தி நாமம் நமச்சிவாய என்னும்
சந்தையால் தமிழ் ஞானசம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்த வல்லார் எலாம்
பந்த பாசம் அறுக்க வல்லார்களே

**<u>பாடல் விளக்கம் :</u>**

"நந்தி என்னும் பெயருடைய சிவபெருமானின் திருநாமமாகிய நமச்சிவாய" என்னும் மூல மந்திரத்தைச் சந்தம் மிகுந்த தமிழ் கொண்டு ஞானசம்பந்தன் அருளிச் செய்த இத்திருப்பதிகத்தைச் சிந்தை மகிழும்படி ஓத வல்லவர்கள் மீண்டும் தமக்கு பிறப்பைத் தேடித்தரும் பந்த பாசத்தினை அறுக்க வல்லவர்களாவர்.

வகுப்பு 25

## திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்

**திருமுறை** : ஆறாம் திருமுறை **பதிகம்** : 99

**பாடல் அமைப்பு** : திருத்தாண்டகம் இராகம் : தாளம் :

**தலம்** : திருப்புகலூர்

**இறைவன்** : அக்னிபுரீசுவரர் **இறைவி** : கருந்தார் குழலியம்மை

**பயன்** : மெய்ப்பொருளாம் இறைவனின் அருளைப் பெற ஓத வேண்டிய பதிகம்.

**சிறப்பு** : திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரசர் தமது 81ஆவது அகவையில் திருப்புகலூர் பெருமானின் திருவடி நீழலைப் பணிந்து எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ என்ற திருத்தாண்டகத்தை அருளி 'புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே,' என்று மெய்யுருகி ஓதி அவருடன் கலந்தனர். இப்பதிகம் அத்தலத்து அண்ணலார் சேவடிக் கீழ் திருநாவுக்கரசர் அணைந்த போது பாடியருளிய பதிகம்.

<u>**பதிக முதல் பாடல்**</u>

**எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ**
**எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்**
**கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்**
**கழலடியே கைதொழுது காணின் அல்லால்**
**ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்**
**ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்**
**புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்**
**பூம்புகலூர் மேவிய புண்ணி யனே** (6.99.1)

எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண் இலேன் மற்று ஓர் களை கண் இல்லேன்
கழல் அடியே கை தொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய் ஒக்க
அடைக்கும் போது உணர மாட்டேன்
புண்ணியா உன் அடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே

## பாடல் விளக்கம் :

அழகிய பூம்புகலூர் மேவிய புண்ணியனே! நினையுந்தன்மை உடையேனாகிய நான் எம்பெருமானாகிய நினது திருவடியை விரும்பி நினையின் அல்லது வேறு எதனை விரும்பி நினைவேன் ? நினது கழலடியையே கைதொழுது காணின் அல்லது வேறு காட்சி இல்லேன் ; மற்றொரு பற்றுக்கோடும் இல்லேன். யான் வாழ்வதற்குப் பொருந்திய உறையுளாகிய இவ்வுடம்பிலே ஒன்பது வாசல் வைத்தாய். அவையாவும் ஒரு சேர அடைக்கப்படும் காலத்து மேற்குறித்தவாறு உன்னையே நினைதலையும் காணுதலையும் செய்யமாட்டேன். ஆதலின் அக்காலம் வரும் முன்பு இப்பொழுதே உன் திருவடிக்கே வருகின்றேன். என்னை ஏற்றுக் கொண்டு அருள்வாயாக.

## பதிக கடைசிப் பாடல்

**ஒருவனையும் அல்லா துணரா துள்ளம்**
**உணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற**
**இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி**
**இல்லாத தரவறுத்தாய்க் கில்லேன் ஏலக்**
**கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன்**
**கடுந்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற**
**பொருவரையாய் உன்னடிக்கே போது கின்றேன்**
**பூம்புகலூர் மேவிய புண்ணி யனே** **(6.99.10)**

ஒருவனையும் அல்லாது உணராது உள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத்துள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி இல்லாத
தரவு அறுத்தாய்க்கு இல்லேன் ஏலக்
கருவரை சூழ் கானல் இலங்கை வேந்தன் கடுந் தேர்
மீது ஓடாமைக் காலால் செற்ற
பொரு வரையாய் உன் அடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே

## பாடல் விளக்கம் :

அழகிய புகலூரில் மேவிய புண்ணியனே ! ஒப்பற்ற ஒருவனாகிய உன்னை அன்றி என் உள்ளம் வேறு ஒன்றும் உணராது. என் உணர்வு கலங்குமாறு, புலனாகாது அருவாய் நின்ற இருவினைகளையும் முக்குணங்களையும் என்மேல் விடுத்துப் பொய்யான 'யான் எனது' என்னும் செருக்கினை அறுத்தாய். அதற்கு யான் செய்யும் கைம்மாறு ஒன்றும் இல்லேன். ஏலம் நிறைந்த கரிய மலைகள் சூழ்ந்த கடற்கரை விளங்கும் இலங்கைக்கு அரசனது விரைந்து செல்லும் தேர், மேலே ஓடாமல் காலால் ஊன்றிய, திருக்கயிலாய மலையானே! நான் நின் திருவடிக்கே வருகின்றேன். என்னை ஏற்றுக் கொண்டு அருள்வாயாக.

வகுப்பு–26

## சுந்தரர் அருளிய தேவாரம்

**திருமுறை :** ஏழாம் திருமுறை **பதிகம் :** 100

**பண் :** பஞ்சமம் இராகம் : ஆஹிரி தாளம் : ரூபகம்

**தலம் :** திருநொடித்தான்மலை (திருக்கயிலாயம்)

**இறைவன் :** திருக்கயிலாயநாதர் இறைவி : பார்வதி அம்மை

**பயன் :** மெய்ப்பொருளாம் இறைவனின் அருளைப் பெற ஓத வேண்டிய பதிகம்.

**சிறப்பு :** களையா உடலோடு சுந்தரர் வெள்ளானையின் மீது ஏறி திருக்கயிலாயம் செல்லுங்கால் பாடி அருளிய திருப்பதிகம் இது. சுந்தரமூர்த்திநாயனார் தாம் வழியிலே அருளிச் செய்த திருப்பதிகத்தை சமுத்திரராஜனாகிய வருணனிடத்திலே கொடுத்தருள; அவன் அதைத் திருவஞ்சைக் களத்திலே உய்த்துத் தெரிவித்தான்.

**<u>பதிக முதல் பாடல்</u>**

**தானெனை முன்படைத்தான் அத றிந்துதன் பொன்னடிக்கே**
**நானென பாடலந்தோ நாயி னேனைப் பொருட்படுத்து**
**வானெனைவந் தெதிர்கொள்ள மத்த யானை அருள்புரிந்து**
**ஊனுயிர் வேறுசெய்தான் நொடித் தான்மலை உத்தமனே (7.100.1)**

தான் எனை முன் படைத்தான் அது அறிந்து தன் பொன் அடிக்கே
நான் என பாடல் அந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வான் எனை வந்து எதிர்கொள்ள மத்தயானை அருள்புரிந்து
ஊன் உயிர் வேறு செய்தான் நொடித்தான்மலை உத்தமனே

**<u>பாடல் விளக்கம் :</u>**

திருக்கயிலை மலைக்கண் வீற்றிருந்து அருளும் முதல்வன், தானே முன்பு என்னை இந்நிலவுலகில் தோற்றுவித்தருளினான். தோற்றுவித்த அத்திருக்குறிப்பினை உணர்ந்து அவனது பொன்போலும் திருவடிகளுக்கு அந்தோ, நான் எத்தனை பாடல்கள் செய்தேன் ! என்னை, அவன் அடியவர்களுள் ஒருவனாக வைத்தெண்ணி வானவர்களும் வந்து எதிர்கொள்ளுமாறு பெரியதோர் யானை ஊர்தியை எனக்கு அளித்து எனது உடலொடு உயிரை உயர்வு பெறச் செய்தான். அவனது திருவருள் இருந்தவாறு என்னே!

**<u>பதிக கடைசிப் பாடல்</u>**

**ஊழிதொ றூழிமுற்றும் உயர் பொன்நொடித் தான்மலையைச்**
**சூழிசை யின்கரும்பின் சுவை நாவல ஊரன்சொன்ன**
**ஏழிசை இன்றமிழால் இசைந் தேத்திய பத்தினையும்**
**ஆழி கடலரையா அஞ்சை யப்பர்க் கறிவிப்பதே (7.100.10)**

ஊழிதொறு ஊழி முற்றும் உயர் பொன் நொடித்தான்மலையை
சூழ் இசை இன் கரும்பின் சுவை நாவல ஊரன் சொன்ன
ஏழ் இசை இன் தமிழால் இசைந்து ஏத்திய பத்தினையும்
ஆழி கடல் அரையா அஞ்சையப்பர்க்கு அறிவிப்பதே

**<u>பாடல் விளக்கம் :</u>**

ஆழமான கடலுக்கு அரசனே! உலகம் அழியுங்காலந்தோறும் உயர்வதும், பொன் வண்ணமானதும் ஆகிய திருக்கயிலை மலைக்கண் வீற்றிருந்து அருளும் முதல்வனை, திருநாவலூரில் தோன்றியவனாகிய யான், ஏழிசையோடு கூடிய இனிய தமிழால், மிக்க புகழ் உடையவனும், கரும்பின் சுவை போன்றவனுமாகிய அப்பெருமானோடு ஒன்றுபட்டுப் பாடிய இப்பத்துப் பாடல்களையும் திருவஞ்சைக்களத்தில் வீற்றிருந்தருளும் பெருமானுக்கு நீ அறிவித்தல் வேண்டும்.

வகுப்பு–27

## மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்

**திருமுறை :** எட்டாம் திருமுறை **பதிகம் :** 51 (அச்சோப் பதிகம்)

**தலம் :** தில்லை (சிதம்பரம்

**இறைவன் :** சபாநாயகர், நடராசர் இறைவி : சிவகாமியம்மை

**சிறப்பு :** மெய்ப்பொருளாம் இறைவனின் அருளைப் பெற ஓத வேண்டிய பதிகம். 'அச்சோ' என்பது வியப்பிடைச்சொல். இறைவன் தமக்குச் செய்த கருணையை அச்சோ என்று வியந்து பாடிய பதிகமாதலின், இஃது அச்சோப்பதிகம் எனப்பட்டது.

**முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**
**பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்**
**சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட**
**அத்தன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே** (8.51.1)

முத்தி நெறி அறியாத மூர்க்கரொடும் முயல்வேனை
பத்தி நெறி அறிவித்து பழ வினைகள் பாறும்வண்ணம்
சித்த மலம் அறுவித்து சிவம் ஆக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளிய ஆறு ஆர் பெறுவார் அச்சோவே

**பாடல் விளக்கம் :**

வீடு பெறும் வழியை அறியாத மூர்க்கரொடு சேர்ந்து அவர்வழி ஒழுகுவேனாகிய எனக்கு, பத்தி வழியைக் காட்டி, பழமையாகிய வினைகள் கெடும்படி அறிவைப் பற்றியுள்ள மூல மலத்தினைப் போக்கி, சிவ வடிவமாக்கி, என்னை ஆண்டருளின என் தந்தையாகிய இறைவன், அவன் எனக்கு அருள் செய்த முறையை வேறு யார் பெற வல்லார்? இஃது அதிசயம்(அச்சோ).

**செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை**
**மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்**
**நம்மையும்ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த**
**அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே** (8.51.9)

செம்மை நலம் அறியாத சிதடரொடும் திரிவேனை
மும்மை மலம் அறுவித்து முதல் ஆய முதல்வன் தான்
நம்மையும் ஓர் பொருள் ஆக்கி நாய் சிவிகை ஏற்றுவித்த
அம்மை எனக்கு அருளிய ஆறு ஆர் பெறுவார் அச்சோவே

**பாடல் விளக்கம் :**

செப்பமாகிய (திருவருள் நெறி) நல்வழியை அறியாத அறிவிலிகளோடு கூடித் திரிகின்ற என்னை, முதல்வனாகிய பெருமான் மும்மலங்களையும் அறும்படி செய்து, எம்மையும் ஓர் பொருளாக்கி, நாயைச் சிவிகையில் ஏற்றினாற் போல எனக்கு உயர்ந்த பதவியை அளித்து தாய் போல உய்வித்து, இறைவன் அருள் செய்த பேற்றைப் பெற வல்லார் வேறு யாவர்? 'பாசத்தில் கட்டுண்டு கிடந்த என்னை இவ்வாறு பாசத்தினின்றும் நீக்கி, சிவத்தோடு சேர்த்து அருளியது என்ன அதிசயம்!' என்று வியக்கின்றார்.

வகுப்பு–28

## மீள் பயிற்சி

## பன்னிரு திருமுறை பாராயணம்
(14 பாடல்கள்)

வகுப்பு–29

### பாராயணத்தில் முதல் ஆறு பாடல்கள் (1 – 6 திருமுறைகள்)

முதலாம் திருமுறை

**தலம்** : திருவேணுபுரம் (சீர்காழி) **பண்** : நட்டபாடை

**வண்டார்குழ லரிவையொடும் பிரியாவகை பாகம்**
**பெண்டான்மிக ஆனான்பிறைச் சென்னிப்பெரு மானூர்**
**தண்டாமரை மலராளுறை தவளந்நெடு மாடம்**
**விண்டாங்குவ போலும்மிகு வேணுபுரம் அதுவே** (1.009)

வண்டு ஆர் குழல் அரிவையொடு பிரியா வகை பாகம்
பெண்தான் மிக ஆனான் பிறைச் சென்னிப் பெருமான் ஊர்
தண் தாமரை மலராள் உறை தவள நெடுமாடம்
விண் தாங்குவ போலும் மிகு வேணுபுரம் அதுவே

**பாடல் விளக்கம் :**

வண்டுகள் மொய்க்கும் கூந்தலை உடைய பெண்ணாகிய உமையம்மை, தன்னிற் பிரியாதிருக்கத் தன் திருமேனியில் இடப்பாகத்தை அளித்து, அப்பாகம் முழுதும் பெண் வடிவானவனும், பிறையணிந்த திருமுடியை உடையவனும் ஆகிய பெருமானது ஊர், தாமரை மலரில் விளங்கும் திருமகள் வாழும், வெண்மையான பெரிய மாடங்கள் விண்ணைத் தாங்குவனபோல உயர்ந்து விளங்கும் வேணுபுரமாகும்.

இரண்டாம் திருமுறை

**தலம்** : திருஆலவாய் **பண்** : காந்தாரம்

**முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு**
**சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு**
**பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு**
**சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே** (2.66.3)

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே

**பாடல் விளக்கம் :**

திருஆலவாயான் திருநீறு வீடுபேறு அளிப்பது. முனிவர்களால் அணியப் பெறுவது. நிலையாக எப்போதும் உள்ளது. தக்கோர்களால் புகழப்படுவது. இறைவனிடம் பக்தியை விளைப்பது. வாழ்த்த இனியது. எண்வகைச் சித்திகளையும் தரவல்லது.

**மூன்றாம் திருமுறை**

**தலம்** : திருஆலவாய் **பண்** : புறநீர்மை

**மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம்மட மானி**
**பங்கயச் செல்வி பாண்டிமா தேவி பணிசெய்து நாடொறும் பரவப்**
**பொங்கழ லுருவன் பூதநா யகன்நால் வேதமும் பொருள்களும் அருளி**
**அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த ஆலவா யாவது மிதுவே** (3.120)

மங்கையர்க்கு அரசி வளவர்கோன் பாவை வரி வளைக்கைம் மடமானி
பங்கயச்செல்வி பாண்டிமாதேவி பணி செய்து நாள்தொறும் பரவ
பொங்கு அழல் உருவன் பூதநாயகன் நால்வேதமும் பொருள்களும் அருள
அம் கயல்கண்ணிதன்னொடும் அமர்ந்த ஆலவாய் ஆவதும் இதுவே

**பாடல் விளக்கம் :**

மங்கையர்க்கரசியார் சோழ மன்னரின் புதல்வி. கைகளில் வரிகளையுடைய வளையல்களை அணிந்தவர். பெண்மைக்குரிய மடம் என்னும் பண்புக்குரிய பெருமையுடையவர். தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளுக்கு ஒப்பானவர். பாண்டிய மன்னனின் பட்டத்தரசி. சிவத்தொண்டு செய்து நாள்தோறும் சிவபெருமானைப் போற்றி வழிபடும் தன்மையுடையவர். அச்சிவபெருமான் ஓங்கி எரியும் நெருப்புப் போன்று சிவந்த வண்ணமுடைய தூய உருவினர். உயிர்கட்கெல்லாம் தலைவர். நான்கு வேதங்களையும், அவற்றின் பொருள்களையும் அருளிச் செய்தவர். அப்பெருமான் அங்கயற் கண்ணி உடனாக வீற்றிருந்தருளும் திருஆலவாய் என்னும் திருத்தலம் இதுவே ஆகும்.

**நான்காம் திருமுறை**

**தலம்** : திருஅதிகை வீரட்டானம் **பண்** : காந்தாரம்

**சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளா மணியும்**
**வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்**
**அண்ண லரண்முர ணேறும் அகலம் வளாய அரவும்**
**திண்ணன் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்**
**அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை** (4.002)

சுண்ணவெண் சந்தனச் சாந்தும் சுடர்த் திங்கள் சூளாமணியும்
வண்ண இரிவை உடையும் வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண் முரண் ஏறும் அகலம் வளாய அரவும்
திண்ணென் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை

**பாடல் விளக்கம் :**

சிவபெருமான் பொடியாக அமைந்த திருவெண்ணீற்றைக் குழைய பூசுபவர். ஒளி வீசும் பிறையும், சூடாமணியும் அணிபவர். அழகிய புலித்தோலை ஆடையாக உடையவர், ஒளிவளரும் பவள வண்ணத் திருமேனி உடையவர். அறத்தினை அரணாகக் கொண்டு விளங்கும் இடபத்தை வாகனமாகக் கொண்டவர். அகன்று மேவும் படத்தையுடைய அரவத்தை ஆபரணமாக உடையவர். அப்பெருமான் நல்ல கெடில நதியில் மேவும் தீர்த்தமும் உடையவர். அத்தகைய சிறப்புடைய இறைவனுக்கு யாம் அடியவர் ஆயினோம். அதனால் யாம் அஞ்சுமாறு உலகில் ஒரு பொருளும் இல்லை. எம்மை அஞ்சுமாறு செய்ய வருவதும் யாதும் இல்லை.

**ஐந்தாம் திருமுறை**

**தலம்** : கோயில் (சிதம்பரம், தில்லை) **பண் :** திருக்குறுந்தொகை

**பனைக்கை மும்மத வேழும் உரித்தவன்**
**நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்**
**அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்**
**தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ** (5.002)

பனைக்கை மும்மத வேழும் உரித்தவன்
நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடம் ஆம் அம்பலக் கூத்தனைத்
தினைத்தனைப் பொழுதும் மறந்து உய்வனோ

**பாடல் விளக்கம் :**

இறைவன், பனைபோன்ற கையையும், மும்மதங்களையும் உடைய யானைத்தோலை உரித்துப் போர்த்தவன். தன்னை நினைப்பவர் மனத்தைக் கோயிலாக் கொண்டவன். யார் யார் எத்தன்மையில் காண விழைகின்றார்களோ அத்தகைய திருக்கோலத்தில் மேவிக் காட்சியளிப்பவர். அவர், அம்பலத்தில் விளங்கும் நடராசப் பெருமான் ஆவார். அத்தகைய சிற்றம்பலக் கூத்தனைத் தினையளவுப் பொழுதும் மறந்து வாழ்வேனோ! (இறைவனை இமைப்பொழுது மறந்தாலும் உய்ய முடியுமோ! ஆதலால் மறவாது அப்பெருமானை ஏத்துவேன் என்பது குறிப்பு.)

**ஆறாம் திருமுறை**

**தலம் :** திருஜயாறு **பண் :** திருத்தாண்டகம்

**எல்லா உலகமு மானாய் நீயே**
**ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே**
**நல்லாரை நன்மை யறிவாய் நீயே**
**ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே**
**பொல்லா வினைக ளறுப்பாய் நீயே**
**புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே**
**செல்வாய செல்வந் தருவாய் நீயே**
**திருவையா றகலாத செம்பொற் சோதீ** 6.38.7

எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச்சுடர் விளக்கு ஆய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச் சேவடி என்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திரு ஐயாறு அகலாத செம்பொன்சோதீ

**பாடல் விளக்கம் :**

திருவையாறு அகலாத செம்பொற் சோதீ! நீ எல்லா உலகங்களும் ஆனவனாய், ஏகம்பத்தில் விரும்பியிருப்பவனாய், நல்லவர்களின் நன்மையை அறிந்து அவருக்கு அருள் செய்பவனாய், ஞான ஒளி வீசும் விளக்காய், கொடிய வினைகளைப் போக்குபவனாய்ப் புகழ்ச் சேவடி என் மேல் வைத்தவனாய்ச் செல்வங்களுள் மேம்பட்ட வீடுபேற்றுச் செல்வத்தை அருளுபவனாய் உள்ளாய்.

வகுப்பு–30

## பாராயணம் – 7, 8, 9ஆம் திருமுறைப் பாடல்கள்

### ஏழாம் திருமுறை

**தலம்** : திருவாவடுதுறை **பண்** : தக்கேசி

**வான நாடனே வழித்துணை மருந்தே மாசி லாமணி யேமறைப் பொருளே**
**ஏன மாஎயி றாமையும் எலும்பும் ஈடு தாங்கிய மார்புடை யானே**
**தேனெய் பால்தயிர் ஆட்டுகந் தானே தேவ னேதிரு வாவடு துறையுள்**
**ஆனை யேஎனை அஞ்சலென் றருளாய் ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே (7.70.9)**

வான நாடனே வழித் துணை மருந்தே மாசு இலா மணியே மறைப்பொருளே
ஏன மா எயிறு ஆமையும் எலும்பும் ஈடு தாங்கிய மார்பு உடையானே
தேன் நெய் பால் தயிர் ஆட்டு உகந்தானே தேவனே திரு ஆவடுதுறையுள்
ஆனையே எனை அஞ்சல் என்று அருளாய் ஆர் எனக்கு உறவு அமரர்கள் ஏறே

### பாடல் விளக்கம்

ஆகாயமாகிய நாட்டை உடையவனே, செல்லும் வழிக்குத் துணையாகிய அமுதம் போன்றவனே, குற்றமில்லாத மாணிக்கம் போன்றவனே, வேதத்தின் பொருளாய் உள்ளவனே, பன்றியின் பெரிய கொம்பினையும், ஆமை ஓட்டையும், எலும்பையும் அணிகளாகத் தாங்கிய மார்பையுடையவனே, 'தேன் , நெய் , பால் , தயிர்' இவைகளால் மூழ்குவித்தலை விரும்புகின்றவனே, இறைவனே, திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கின்ற என் யானை போல்பவனே, தேவதேவனே, எனக்கு உறவு ஆவார் உன்னையன்றி வேறு யாவர் உளர்? என்னை, 'அஞ்சேல்' என்று சொல்லித் தேற்றி எனக்கு அருள் செய்வாயாக.

### எட்டாம் திருமுறை

**திருவாசகம்– 08 (திருஅம்மானை)**

(குறிப்பு : அம்மானை என்று ஒவ்வொரு பாட்டு இறுதியிலும் முடிகின்றமையால், இது திரு அம்மானை என்னும் பெயருடையதாயிற்று. 'திரு' என்பது அடைமொழி. 'அம்மானை' என்பது மகளிர் விளையாடல்களுள் ஒன்று. இது, மூன்று பெண்கள் கூடி மூன்று காய்களை வைத்துக்கொண்டு ஆடுவது. இப்பகுதி,அவ்வாறு விளையாடுங்கால் பாடுவது போல அமைந்துள்ளது. திருவெம்பாவையில் நீராடலைக் குறித்து, இங்கு அம்மானை ஆடலைக் குறித்தார் ஆசிரியர்.)

**தலம் :** திருவண்ணாமலை

**பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்**
**பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்**
**விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்**
**கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை**
**மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு**
**புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்** (8.8.8)

பண் சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்து ஈசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலி மதுரை
மண் சுமந்த கூலி கொண்டு அக் கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன் மேனி பாடுதும் காண் அம்மானாய்

**பாடல் விளக்கம் :**

பண்களைக்கொண்ட பாடலுக்கு, தக்க பரிசினை வழங்குகின்ற, பெண் தங்கிய பாகத்தையுடையானும், திருப்பெருந்துறையில் இருப்பவனும், தேவலோகத்தவரும் புகழும்படியான கீர்த்தியையுடையவனும், பெருமையமைந்த, மண்ணுலகத்துக்கு இறைவனும், கண்ணைக் கொண்ட நெற்றியையுடைய கடவுளும் ஆகிய நம் பெருமான், ஆரவாரத்தையுடைய மதுரையில், பிட்டு வாணிச்சிக்காக மண்ணைச் சுமந்து, பிட்டைக் கூலியாகப் பெற்று, பாண்டிய மன்னனால், அடியுண்டு, புண்பட்ட, பொன்போலும் திருமேனியினது புகழை,அம்மானைப் பாட்டாக பாடுவோமாக.

**திருக்கோவையார்**

**திருக்கோவை** –19 – **மணஞ்சிறப்புரைத்தல்** **பாடல்** : 9

**ஆனந்த வெள்ளத் தழுந்துமொர் ஆருயிர் ஈருருக்கொண்**
**டானந்த வெள்ளத் திடைத்திளைத் தாலொக்கும் அம்பலஞ்சேர்**
**ஆனந்த வெள்ளத் தறைகழ லோனருள் பெற்றவரின்**
**ஆனந்த வெள்ளம்வற் றாதுமுற் றாதிவ் வணிநலமே**

ஆனந்த வெள்ளத்து அழுந்துமொர் ஆருயிர் ஈர் உருக்கொண்டு
ஆனந்த வெள்ளத்திடைத் திளைத்தால் ஒக்கும் அம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத்து அறை கழலோன் அருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம் வற்றாது முற்றாது இவ் அணிநலமே

**பாடல் விளக்கம் :**

இன்ப வெள்ளத்தே அழுந்தக் கடவதோர் அரிய உயிர் இரண்டு வடிவு கொண்டு காம இன்பம் துயித்து திளைத்திருக்கும். இது எதைப் போன்றது என்றால், வற்றாத இன்பம் தரும் திருவம்பலத்தைப் பொருந்தி இன்பவெள்ளத்தைத் தருகிற ஒலிக்கின்ற கழலை உடைய அம்பலத்தானின் திருவருளைப் பெற்றவர்களின் ஆனந்த வெள்ளம் வற்றாது, அது போல இவ்வின்ப வெள்ளமும் ஒரு காலத்தும் குறைவு படாது.

**ஒன்பதாம் திருமுறை**

**திருவிசைப்பா**

**தலம்** : கங்கைகொண்ட சோளேச்சரம் **பண்** : பஞ்சமம் **அருளியவர்** : கருவூர்த் தேவர்

**அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே**
**அன்பொடு தன்னைஅஞ் செழுத்தின்**
**சொற்பதத் துள்வைத் துள்ளம்அள் ளூறும்**
**தொண்டருக் கெண்டிசைக் கனகம்**
**பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்**
**பவளவா யவர்பணை முலையும்**
**கற்பகப் பொழிலும் முழுதுமாங் கங்கை**
**கொண்டசோ ளேச்சரத் தானே (9.13.3)**

அற்புதத் தெய்வம் இதனின் மற்றுண்டே
அன்பொடு தன்னை அஞ்செழுத்தின்
சொற்பதத்து உள் வைத்து உள்ளம் அள்ளூறும்
தொண்டருக்கு எண் திசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன் மாளிகையும்
பவள வாயவர் பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாம் கங்கை
கொண்ட சோளேச்சரத் தானே

**பாடல் விளக்கம் :**

அன்போடு இறைவனாகிய தன்னை திருவைந்தெழுத்தின் சொற்களாகிய நிலையில் வைத்து உள்ளம் உருகுகின்ற உன் அடியார்களுக்கு எட்டுத் திசைகளிலும் உள்ள மலைகள் போன்ற பொன் குவியலும், அழகிய பொன்மயமான பேரில்லங்களும், பவளம் போன்ற சிவந்த வாயினையுடைய மகளிரின் பருத்த தனங்களும், கற்பகச் சோலையும் ஆகிய எல்லா நுகர் பொருள் இன்பங்களும் தானே வழங்கும் கங்கைகொண்ட சோளேச்சரத் தானைத் தவிர மேம்பட்ட தெய்வம் வேறு உளதோ?

**திருப்பல்லாண்டு**

**தலம்** : கோயில் **பண்** : பஞ்சமம் **அருளியவர்** : சேந்தனார்

**சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்**
**ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற தார்பெறு வார்உலகில்**
**ஊரும் உலகும் கழற உழறி உமைமண வாளனுக்காட்**
**பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே (9.29.7)**

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே

**பாடல் விளக்கம் :**

சிவநெறி ஒழுக்கமும் அவன் திருவருளும் அடியேனிடத்து நிலைபெற்று விளங்கும்படி, அச்சிவலோக நாயகனான பெருமானுடைய திருவடிகளின் கீழ் மற்ற யாவரும் பெறாததான 'யாவரையும் யாவற்றையும் உடையவன் சிவபெருமானே' என்று அறியும் அறிவினைப் பெற்றேன். அவ்வறிவால் அடியேன் பெற்ற பேற்றினை வேறு யாவர் பெறக்கூடும்? இவ்வுலகில் நாட்டில் உள்ளாரும் ஊரில் உள்ளாரும் எடுத்துக் கூறும்படி, அவன் புகழைப் பிதற்றி உமாதேவியின் கணவனாகிய எம்பெருமானுக்கு நாம் அடிமையாகிய திறத்தை இந்நிலவுலகத்தாரும் தேவர் உலகத்தாரும் அறியும் வகையில் அப்பெருமான் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துவோமாக.

வகுப்பு–31

## பாராயணம் – 10,11,12ஆம் திருமுறைப் பாடல்கள்

**பத்தாம் திருமுறை (திருமந்திரம்)**

**அருளியவர்** : திருமூலர்

திருமந்திரத்தில் முதல் தந்திரம் : அதிகாரம்–21. அன்புடைமை முதல் பாடல்

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்தி ருப்பாரே**

**பாடல் விளக்கம் :**

அனுபவம் அற்றவர் அன்பாகிய சக்தியும் அறிவாகிய சிவமும் இரண்டு என்பர். அன்பின் முதிர்ச்சியால் சிவமாகிய அறிவு விளங்கும் என்பதை உயர்ந்தவர் தாழ்ந்தவர் ஆகிய எவரும் உணர்வதில்லை. அன்பு தான் சிவத்தை விளங்கச் செய்வது என்பதை எல்லாரும் அறிந்த பின்பு அன்பே வடிவாய்ச் சிவமாம் தன்மையை அடைந்திருந்தார். அன்பு தான் சிவத்தை விளங்கச் செய்யும்.

**பதினொன்றாம் திருமுறை (திருமுகப்பாசுரம்)**

**அருளியவர்** : திருவாலவாயுடையார்

**மதிமலி புரிசை மாடக் கூடற்**
**பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற**
**கன்னம் பயில்பொழில் ஆல வாயின்**
**மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்**
**பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்**
**கொருமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்**
**குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்**
**செருமா உகைக்கும் சேரலன் காண்க**
**பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்**
**தன்போல் என்பால் அன்பன் தன்பாற்**
**காண்பது கருதிப் போந்தனன்**
**மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே**

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பால் நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆல வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
ஒருமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்கும் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே

பாடல் விளக்கம் :

மின்னலைப் போல் விளங்குகின்ற செம்பொன்னினாலும் இரத்தினங்களாலும் அமைந்த உப்பரிகைகள் நிறைந்த மதுரையிலிருக்கும் சிவனாகிய யாம் எழுதி விடுக்கும் திருமுகத்தை(ஓலையை), பருவ காலத்து மேகம் போல் புலவர்களுக்குக் கைம்மாறு கருதாமல் கொடுக்கிறவரும் ஒளி பொருந்திய சந்திரனைப் போன்ற குடையின் கீழ் போரில் யானையைச் செலுத்துகிறவருமான சேரமான் பெருமாள் காண்க. தன்னைப் போல் நமதிடத்து அன்பனாகிய இன்னிசை யாழ்ப் பத்திரன் தன்னிடத்திற்கு வருகிறதனால், அவன் விரும்பிய வண்ணம் மிகுந்த திரவியங்களைக் கொடுத்து அனுப்புவீராக.

(**குறிப்பு:** இப்பாசுரம் மதுரை சோமசுந்தரக் கடவுள் பாண பத்திரருக்கு உதவி புரிய வேண்டுமென்று சேரமான் பெருமாள் நாயனாருக்கு எழுதி அருளிய திருமுகம்(ஓலை). பாண பத்திரர் மதுரையில் சிவபெருமானுக்கு இசைப் பணி புரிந்து வந்தவர். திருமுகப் பாசுரம் பன்னிரண்டு அடிகளால் ஆன ஒரு சிறு நேரிசை ஆசிரியப்பா ஆயினும் பாடியவர் சிவபெருமான் ஆகையால் பெருமை மிக்குடையதாயிற்று. இப்பாடலின் முதல் நான்கு அடிகளில் இதனைப் பாடிய சிவபெருமானுடைய சிறப்பும், அடுத்துள்ள நான்கு அடிகளில் அவ் இறைவனால் பாடப் பெறும் புகழமைந்த பாட்டுடைத் தலைவராகிய சேரமான் பெருமாளுடைய சிறப்பும் இறுதியில் உள்ள நான்கு அடிகளில் இதனைப் பாடுதற்குக் காரணமாகிய பாண பத்திரர் என்னும் அடியாருடைய அன்புரிமைச் சிறப்பும், அவருக்குப் பொருள் கொடுத்து அனுப்புக என்னும் செய்தியும் குறிக்கப் பெற்றுள்ளன.)

**<u>பன்னிரண்டாம் திருமுறை (திருத்தொண்டர் புராணம்)</u>**

**அருளியவர்** : சேக்கிழார்

திருத்தொண்டர் புராணம் – இரண்டாம் காண்டம் – வம்பறா வரிவண்டுச் சருக்கம் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம்

**மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்**
**அண்ணலார்அடியார் தமை அமுது செய்வித்தல்**
**கண்ணினால்அவர் நல்விழாப் பொலிவுகண்டு ஆர்தல்**
**உண்மையாம் எனில் உலகர் முன் வருக என வுரைப்பார்** (12.28.1087)

**<u>பாடல் விளக்கம் :</u>**

இம்மண்ணுலகத்தில் வினைக்கு ஈடாக வந்து பிறந்த உயிர்கள், பெறும் பிறவிப் பயனாகிய உறுதிப் பொருள்களாவன, பிறையை அணியும் பெருமானின் அடியவர் தமக்குத் திரு அமுது செய்வித்தலும், கண்களால் அவ்வடியவர்களின் உள்ளத்து உயிர்க்கு உயிராய் நிற்கும் இறைவரின் திருவிழாக்களின் பெரும் பொலிவைக் கண்டு மகிழ்தலும் ஆகிய இவ்விரண்டுமே என்பது உண்மையானால், பூம்பாவையே! இவ்வுலகத்தார் முன் உடலும் உயிரும் பொருந்த வருவாயாக! எனச் சூள் செய்து எடுத்து உரைப்பாராகி..

**மங்கல வாழ்த்து**

1. **உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்**
   **நிலவு லாவிய நீர்மலி வேணியன்**
   **அலகில் சோதிய னம்பலத் தாடுவான்**
   **மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்** **(சேக்கிழார், பெரியபுராணம்)**

   உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
   நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
   அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
   மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

2. **வையம் நீடுக மாமழை மன்னுக**
   **மெய் விரும்பிய அன்பர் விளங்குக**
   **சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக**
   **தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே** **(சேக்கிழார், பெரியபுராணம்)**

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான் தழைத்து ஓங்குக
தெய்வ வெண் திருநீறு சிறக்கவே

3. **வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்**

**(கச்சியப்ப சிவாச்சாரியார், கந்த புராணம்)**

**வகுப்பு-32**

**மீள் பயிற்சி**

**திருச்சிற்றம்பலம்**